# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றத்தின்

# நிலையியற் கட்டளைகள்

(1993 பெப்ரவரி மாதம் 26 ஆந் தேதி வரையிலான திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன)

பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்  பாராளுமன்றத்தின்

# நிலையியற் கட்டளைகள்

(1993 பெப்ரவரி மாதம் 26 ஆந் தேதி வரையிலான திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் எனப் பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மூலம் 1979, மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையியற் கட்டளைகள், அவைகளுக்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் சேர்க்கப்பட்டு இப்பதிப்பின் மூலம் மீண்டும் சமர்ப்பிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பக்கங்களில் கீழுள்ள குறிப்புகள் மூலம் நிலையியற் கட்டளைகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் காட்டப்பட்டுள்ளன.

எஸ்.என்.செனவிரத்ன,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

# உள்ளடக்கம்


| நிலையியற் கட்டளை இலக்கம் | | முதற்கூட்டம் | | | | பக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | .. | பாராளுமன்றத்தின் முதற் கூட்ட நடைமுறைகள் | ... | ... | ... | 1 |
| 2 | .. | உறுப்பினர் இருக்கை ஒழுங்கு | ... | ... | ... | 1 |
| 3 - 4 | .. | சபாநாயகர் தெரிவு | ... | ... | ... | 1 |
| 5 | .. | சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் | ... | ... | ... | 3 |
| 6 | .. | பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் தெரிவு | | ... | ... | 3 |
| | | **கூட்டங்கள்** | | | | |
| 7 - 8 | .. | கூட்டங்கள் | ... | ... | ... | 4 |
| 9 | .. | செயலாளர் நாயகத்தின் கடமைகள் | ... | ... | ... | 5 |
| 10 - 11 | .. | கூட்ட நடப்பெண் | ... | ... | ... | 6 |
| 12 | .. | பாராளுமன்ற நடவடிக்கைகள் (மொழி) | ... | ... | ... | 6 |
| 13 - 14 | .. | ஒத்திவைப்பு | ... | ... | ... | 7 |
| 15 - 16 | .. | தடங்கற் பிரேரணைகள் | ... | ... | ... | 7 |
| 17 | .. | அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விடயத்தையொட்டிய ஒத்திவைப்பு | | | ... | 8 |
| 18 | .. | புறத்தோர் | ... | ... | ... | 8 |
| | | **பொது அலுவல்** | | | | |
| 19 | .. | பாராளுமன்ற அலுவல் | ... | ... | ... | 9 |
| 20 - 21 | .. | பொது அலுவல் | ... | ... | ... | 10 |
| 22 | .. | பத்திரங்கள் | ... | ... | ... | 10 |
| 23 - 25 | .. | முன்னறிவித்தல்கள் | ... | ... | ... | 11 |
| 25அ | .. | மனுக்கள் | ... | ... | ... | 12 |
| 26 - 32 | .. | கேள்விகள் | ... | ... | ... | 13 |
| | | **விவாதம்** | | | | |
| 33 - 35 | .. | விவாதத்திற்குரிய விடயங்கள் | ... | ... | ... | 15 |
| 36 | .. | எதிர்நோக்கல் | ... | ... | ... | 15 |
| 37 - 40 | .. | திருத்தங்கள் | ... | ... | ... | 15 |
| 41 | .. | விவாதமுற்றுக்கள் | ... | ... | ... | 17 |
| 42 - 44 | .. | வாக்களிப்பு | ... | ... | ... | 18 |
| | | **சட்டமூலங்கள்** | | | | |
| 45 | .. | சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை | | ... | ... | 18 |
| 46 | .. | அவசரச் சட்டமூலங்கள் | ... | ... | ... | 19 |
| 46அ | .. | ஒருங்கியை நிரலிலுள்ள விடயங்கள் சம்பந்தமான சட்டமூலங்களும் உத்தேச நியதிச் சட்டங்களும் | ... | ... | ... | 19 |
| 47 - 48 | .. | தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | ... | ... | ... | 20 |
| 49 | .. | பாதிக்கப்பட்ட கட்சிக்காரர், சாட்சிகள், சாட்சியம் | ... | ... | ... | 21 |
| 50 | .. | இரண்டாம் மதிப்பீடு | ... | ... | ... | 22 |
| 51 | .. | இரண்டாம் மதிப்பீட்டில் விவாதம் | ... | ... | ... | 22 |
| 52 - 53 | .. | சட்டமூலம் மீதான குழு | ... | ... | ... | 22 |
| 54 - 61 | .. | குழுநிலையில் சட்டமூலங்கள் மீதான நடைமுறை | ... | ... | ... | 23 |
| 62 - 65 | .. | சட்டமூலங்கள் மீதான குழுக்களின் அறிக்கைகள் | ... | ... | ... | 24 |
| 66 - 68 | .. | மூன்றாம் மதிப்பீடு | ... | ... | ... | 24 |
| 69 | .. | சபாநாயகரது சான்றுவரை | ... | ... | ... | 25 |
| 70 | .. | சட்டமூலத்திற்கென ஒதுக்கப்பட்ட நாட்கள் | ... | ... | ... | 25 |

| நிலையியற் கட்டளை இலக்கம் | | ஒழுங்கு | பக்கம் |
|---|---|---|---|
| 71 | .. | ஒழுங்கு விதிப் பொறுப்பு ... ... ... | 26 |
| 72 ‑ 77 | .. | பாராளுமன்றத்தில் ஒழுங்கு ... ... ... | 27 |
| 78 ‑ 83 | .. | விவாத விதிகள் ... ... ... | 29 |
| 84 | .. | பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள் ... | 32 |
| 85 | .. | உரையாற்றா உறுப்பினர்களுக்கான விதிகள் ... ... ... | 33 |
| | | **குழுக்கள்** | |
| 86 ‑ 93 | .. | முழுப் பாராளுமன்றக் குழு ... ... ... | 33 |
| 94 ‑ 103 | .. | தெரிகுழுக்கள் ... ... ... | 34 |
| 104 ‑ 115 | .. | ஆலோசனைக் குழுக்கள் ... ... ... | 35 |
| 115அ | .. | ஆலோசனை உப குழுக்கள் ... ... ... | 37 |
| 116 ‑ 120 | .. | நிலையியற் குழுக்கள் (சட்டவாக்கம்) ... ... ... | 38 |
| 121 ‑ 129 | .. | சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள் ... ... ... | 39 |
| | | (அ) தெரிவுக்குழு | 39 |
| | | (ஆ) சபைக்குழு | 39 |
| | | (இ) நிலையியற் கட்டளைகள் குழு | 40 |
| | | (ஈ) பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு | 40 |
| | | (உ) அரசாங்கக் கணக்குக் குழு | 40 |
| | | (ஊ) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு | 41 |
| | | (எ) சிறப்புரிமைகள் பற்றிய குழு | 41 |
| | | (ஏ) பொதுமனுக் குழு | 42 |
| | | (ஐ) உயர் பதவிகள் பற்றிய குழு | 43 |
| 130 ‑ 130அ | | குழுக்களுக்கான பொது விதிகள் ... ... ... | 49 |
| | | **நிதி** | |
| 131 | .. | ஒதுக்கீட்டுச் சட்டமூலங்களின் அட்டவணைகள் மீது முழுப் பாராளுமன்றக் குழுவின் நடைமுறை ... ... ... | 45 |
| 132 ‑ 132அ | | மிகைச் செலவுகள் ... ... ... | 46 |
| 133 | .. | அரசாங்கப் பணம் ... ... ... | 48 |
| | | **பலவினம்** | |
| 134 | .. | நிலையியற் கட்டளைகளில் திருத்தம் ... ... ... | 48 |
| 135 | .. | நிலையியற் கட்டளைகளை இடை நிறுத்துதல் ... ... ... | 49 |
| 136 ‑ 138 | .. | சபாநாயகரின் பொது அதிகாரம் ... ... ... | 49 |
| 139 | .. | தவிசாளர் குழாம் ... ... ... | 49 |
| 140 | .. | உறுப்பினர்களைத் தொழில் முறையில் அமர்த்தல் ... ... ... | 49 |
| 141 | .. | சாட்சிகளின் செலவு ... ... ... | 50 |
| 142 | .. | எஞ்சிய அதிகாரங்கள் ... ... ... | 50 |

## இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள்

### பொதுத் தேர்தல் ஒன்றின்பின் நிகழும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் முதற்கூட்ட நடைமுறைகள்

1. பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் நடைபெறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (இதன் பின்னர் “பாராளுமன்றம்” என அழைக்கப்படும்) பாராளுமன்றத்தின் கூடுதல் ஒன்றின் முதல் நாளில், முறைப்படி நியமித்த நேரத்திலும் இடத்திலும் உறுப்பினர் ஒன்று கூடி, 2ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கமைய இருக்கைகளில் அமர்ந்ததும் கூட்டத்தினைக் கூட்டுவித்தல்பற்றிய (இதன் பின்னர் “சனாதிபதி” என அழைக்கப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினது பிரகடனத்தை (இதன் பின்னர் “செயலாளர் நாயகம்” என அழைக்கப்படும்) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல் வேண்டும். அதனையடுத்து அத்தின அலுவல் ஒழுங்குகள் பின்வருமாறு அமைதல் வேண்டும் :-

(அ) சபாநாயகர் தெரிவு,

(ஆ) சபாநாயகரும் அவரையடுத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர் அனைவரும் அரசியலமைப்புக்கு அமைய சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்தல்,

(இ) (இதன் பின்னர் “பிரதிச் சபாநாயகர் ” என அழைக்கப்படும்) பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவரின் தெரிவு,

(ஈ) குழுக்களின் பிரதித் தவிசாளரின் தெரிவு.

இவ்வலுவல் முடிவுற்றதும் பாராளுமன்றம் நிர்ணயித்த தேதியும் நேரமும் வரும்வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்.

### உறுப்பினர் இருக்கை ஒழுங்கு

2. (1) பொதுத்தேர்தல் ஒன்றின் பின்னர் நிகழும் பாராளுமன்றத்தின் முதல் நாட் கூட்டத்திலும் அதனையடுத்து உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் இருக்கை ஒதுக்கப்படும்வரையிலும் உறுப்பினர் தடை எல்லைக்குள் எந்த இருக்கையிலும் அமரலாம்.

(2) தமதுதெரிவுக்குப் பின்னர் சபாநாயகர் தாம் தக்கதெனக் கருதியவுடன் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இருக்கையை ஒதுக்குவார்; தாம் தக்கதெனக் கருதும் பட்சத்தில் இவ்விருக்கை ஒதுக்கீட்டனை அவர் காலத்திற்குக் காலம் மாற்றலாம்.

(3) சபாநாகரின் தற்றுணிபுக்கமைய இருக்கைகள் ஒதுக்கப்படவேண்டும்; இவ்விடயத்தில் அவரது முடிபே இறுதியானது.

### சபாநாயகர் தெரிவு

3. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக அல்லது வேறுவிதமாக சபாநாயகர் பதவி வெறுமையாகும் வேளைகளில் பாராளுமன்றமானது வெற்றிடமேற்பட்டதன் பின்னர் கூடும் முதலாவது கூட்டத்தின்போது கூட்டநடப்பேண் காணப்படும் பட்சத்தில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு முற்பட வேண்டும்.

4. சபாநாயகர் தெரிவிற்கான நடைமுறை பின்வருமாறு அமையும்:-

(1) சபாநாயராகத் தெரிவுசெய்யபப்படுவதற்கென ஓர் உறுப்பினரை முன்மொழிய விரும்பும் உறுப்பினர் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அப்பதவியை வகிக்க அவர் சம்மதமுடையர் என்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவர் செயலாளர் நாயகத்தை விளித்து, அப்பொழுது சமுகமாயிருக்கும் இன்னோர் உறுப்பிரைச் சபாநாயகராகப் பாராளுமன்றத் திற்கு முன்மொழிந்து "........... (உறுப்பினரின் பெயரைக் குறிப்பிட்டு) சபாநாயகராக இப்பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமர்வாராக" எனப் பிரேரித்தல் வேண்டும். இப்பிரேரணை வழிமொழியப்படல் வேண்டும். ஆனால் இதனில் விவாதம் அனுமதிக்கப்படலாகாது.

(3) ஒரேயோர் உறுப்பினரே இவ்வாறு சபாநாயகராக முன்மொழிந்து வழிமொழியப் படின் அவர் தெரிவானாரென செயலாளர் நாயகம் வினாவின்றியே பிரகடனம் செய்தல் வேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழி யப்பட்டு வழிமொழியப்படின் இரண்டு நிமிடங்களுக்கு வாக்கழைப்பு மணி அடித்த பின்னர் குடவோலை மூலம் சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு பாராளுமன்றம் முற்படும்.

(4) குடவோலை வாக்கெடுப்பு ஒன்றின் பொருட்டுச் செயலாளர் நாயகம், சமுகமளித்துள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தாம் வாக்களிக்க விரும்பும் உறுப்பினரின் பெயரை எழுதலாமெனக் குடவோலை ஒன்றினைக் கொடுத்தல் வேண்டும். வாக்களிக்கும் உறுப்பினர் குடவோலையில் எழுதிய பெயர் வெளியே தெரியாவண்ணம் குடவோலையினை மடிப்பதுடன் அதில் கையொப்பமிடலும் வேண்டும்.

(5) குடவோலை செயலாளர் நாயகத்தால் அல்லது அவர் பதிலாளராக்கும் பாராளுமன்றத்தின் பிறிதோர் உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டுச் செயலாளர் நாயகத்தால் பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் வைத்து எண்ணப்படல் வேண்டும். அந்த வாக்கெடுப்பின் முடிபை செயலாளர் நாயகம் பிரகடனம் செய்தல் வேண்டும்.

(6) (அ) இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்படுமிடத்து, முதலாவது குடவோலை வாக்கெடுப்பில் ஓர் வேட்பாளர் ஏனைய வேட்பாளர்கள் ஒருமித்துப் பெற்ற வாக்குகளிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெறத் தவறினால் மிகக்குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் சபாநாயகர் தெரிவிலிருந்து விலக்கப்பட்டு குடவோலை வாக்கெடுப்பு மேலும் தொடருதல் வேண்டும். ஒரு வேட்பாளர் (சந்தர்ப்பத்திற்கமைய) எஞ்சும் ஒரு வேட்பாளரிலும் கூடுதலான வாக்குகளை அல்லது எஞ்சிய வேட்பாளர்கள் ஒருமித்துப்பெற்ற வாக்குகளிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெறும்வரை ஒவ்வொரு குடவோலை வாக்கெடுப்பிலும் மிகக் குறைந்த வாக்குகள் பெறும் வேட்பாளர் விலக்கப்பட்டு வருவார்.

(ஆ) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே குடவோலை வாக்கெடுப்பு நிகழுமிடத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சம அளவான வாக்குகளைப் பெற, அவர்களுள் ஒருவர், இதன் (அ) பிரிவீன்படி தெரிவிலிருந்தும் விலக்கப்பட வேண்டுமாயின், அத்தகைய சம அளவான வாக்குகளைப் பெற்றவர்களில் எவரைத் தெரிவிலிருந்தும் விலக்குவதென்பதைச் சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயித்தல் வேண்டும். சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெற வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

(இ) இரு வேட்பாளர்களுக்கிடையே நிகழும் குடவோலை வாக்கெடுப்பில் சம அளவு வாக்குகள் கிடைக்குமிடத்து மேலுமொரு குடவோலை வாக்கெடுப்பு நடத்துதல் வேண்டும். அக்குடவோலை வாக்கெடுப்பின் இறுதியிலும் வாக்குகளின் எண்ணிக்கை சம அளவினதாயிருந்தால் அவ்வேட்பாளர்களுள் எவரைத் தெரிவிலிருந்து விலக்க வேண்டுமென்பது சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படல் வேண்டும். அச்சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெற வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

(7) குடவோலைகள் எண்ணப்பட்டதும் அவற்றை ஒரு பேழையிலிட வேண்டும். உறுப்பினர் ஒருவர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டார் எனப் பிரகடனமானதும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் ஆப்பேழையை மூடி முத்திரையிட்டு ஒரு பஞ்சாங்க மாதத்திற்குச் செயலாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைத்தல் வேண்டும். பின்னர் பாராளுமன்றத்திலிருந்து தமக்குக் கிடைக்கும் பணிப்பெதற்கும் அமையச் செயலாளர் நாயகம் இக் குடவோலைகளை எரித்துவிட்டு அவ்வாறு செய்யப்பட்ட தாகப் பாராளுமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

## சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம்

5. (1) தாம் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர் அனைவரும் சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்துகொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் வகைசெய்தல் வேண்டும். செயலாளர் நாயகத்தால் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்துவைக்கப்படுதல் வேண்டும்.

(2) சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்துகொண்டவுடன் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகம் அதற்கெனவைத்திருக்க வேண்டிய புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(3) ஏற்கனவே சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்துகொள்ளாத ஓர் உறுப்பினர் பாராளுமன்றம் கூடுகின்ற எத்தினத்திலும் 19ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்படும் நேரத்தில் சபாபீடத்தில் சமுகமளிக்கலாம். அவருக்கு சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்துவைக்கப்படும்; இதன்பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் தெரிவு

6. (1) 1ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது அல்லது பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நிகழும் முதலாவது கூட்டத்தின் பொது அலுவல் ஆரம்பத்தின்போது சந்தர்ப்பத்திற்கமைய பிரதிச் சபாநாயகரொருவரை அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரொருவரைத் தெரிவு செய்வதற்குப் பாராளுமன்றம் முற்படும்.

(2) பிரதிச் சபாநாயகரதும், குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தெரிவு முறை, தெரிவைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர்ந்த மற்றெல்லா விதத்திலும், கூடுமானவரை சபாநாயகர் தெரிவுமுறையை ஒத்திருத்தல் வேண்டும்.

7. ✞*(1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, மாதந்தோறும் ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை அடுத்துவரும் வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இரு வாரங்களிலும் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும். அத்தகைய முதலாவது மூன்றாவது வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் அமர்வு மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்க வேண்டுமெனினும், சனாதிபதியால் அழைக்கப்பட்ட கூட்டமொன்று, சனாதிபதியால் கூட்ட முன்னறிவித்தல் கொடுக்கும்போது நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நேரத்தில் ஆரம்பித்தல் வேண்டும்.

(3) பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் பாராளு மன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி நண்பகல் 12.00 மணிக்கு வினா வின்றி இடைநிறுத்தப்பட்டு பி.ப. 1.30 மணிக்கு மீளத் தொடங்குதல் வேண்டும்.

(4) சபாநாயகர் பி.ப. 4.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பார்.

(5) பி.ப. 3.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வேளையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால், தவிசாளர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடல் வேண்டும். பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்தி வைக்கவெனவும் அல்லது குழுநிலையியல் "தவிசாளர் முன்னேற்றத்தை அறிவிக்குக" அல்லது "அவர் அக்கிராசனத்தை விட்டகலுக" எனவும் பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால், அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவிழக்கும்.

எனினும் அலுவலை இடைநிறுத்துகையில் எப்பொழுதும் 41ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்பட்டலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருந்தால், அந்நடவடிக்கைகள் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைவரோ ஆசனத்தை விட்டகலலாகாது.

(6) பரிசீலனையிலிருக்கும் அலுவல் பி.ப. 3.30 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவலெதுவும் பரிசீலனைக்குட் படுத்தலாகாது.]

---

✞* 1985 சனவரி 8 ஆந் தேதிய பதினோராவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது பின்னர் 1989 செப்தெம்பர் 6 ஆந் தேதிய இருபத்தி மூன்றாவது திருத்தத்தால் மீண்டும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

✝* 8. [பொது அலுவல்களின் தொடக்கத்தில் அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படுவதற்காகப் பின்வரும் கருத்துப்பட ஒரு பிரேரணையைக் கொணரலாம்:-

"இன்றைய அமர்வில் குறித்த ஒரு அலுவல் மீதான நடவடிக்கைகள் 7ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுவதாக"

மேலும், அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து குறித்த அவ்வலுவல் இடைநிறுத்தத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் விவாதத்திற்குட்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை இடைநிறுத்தலாகாது; அத்துடன் எதிர்ப்பிருப்பினும் எந்நேரத்தும் அவ்வலுவல் எடுக்கப்படலாம்.

எனினும் இந்நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப் பெற்ற அலுவல் பி.ப.4.30 மணிக்குப் பின்னர் முடிவுறும்போது, விலக்குப்பெற்ற அலுவலின் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்.]

### செயலாளர் நாயகத்தின் கடமைகள்

9. (1) பாராளுமன்றத்தினதும் முழுப்பாராளுமன்றக் குழுக்களினதும் நடவடிக்கை களைச் செயலாளர் நாயகம் அறிக்கைப்படுத்தி வைப்பதுடன் அத்தகைய பிரதியொன்றை இயலுமானால் பாராளுமன்றக் கூட்டத்திற்கு அடுத்த தினமே உறுப்பினரிடையே சுற்றிப் பரப்ப வேண்டும். சமுகமளித்த உறுப்பினரின் பெயர்களும் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எல்லா முடிபுகளும் இவ்வறிக்கையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவிலோ வாக்கெடுப்புகள் நிகழும் சந்தர்ப்பங்களில் பிரேரணைக்குச் சார்பாகவும் எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையும் 42 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் வாக்கெடுப்பு நிகழ்ந்தால், அவ்வாறு வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெயர்களும் வாக்கெடுப்பினின்றும் ஒதுங்கி நிற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் அறிக்ககையில் இடம்பெறல் வேண்டும்.

(3) கூட்ட அறிக்கை உறுத்திப்படுத்தப்படத் தேவையில்லை. ஆனால் அறிக்கையில் பிழைகளிருப்பின், பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பிரேரிக்கப்படும் பிரேரணை மூலம் அவை திருத்தப்படலாம்.

(4) நாளுக்கு நாள் செயலாளர் நாயகம் ஒழுங்குப் புத்தகமொன்றினைத் தயாரித்து பாராளுமன்றச் சபாபீடத்திலும் நூல் நிலையத்திலும் வைத்தல் வேண்டும். இவ்வொழுங்குப் புத்தகத்தில் எதிர்வரும் எந்தவொரு தினத்திற்குமென நியமிக்கப்பட்ட எல்லா அலுவல்களும் குறித்த அல்லது குறிக்காத ஓர் எதிர்வரும் தினத்திற்கென ஒத்திவைக்கப்பட்ட வினாக்களின் அல்லது பிரேரணைகளின் முன்னறிவித்தல்களும் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

(5) குறிப்பிட்ட ஒரு தினத்திற்கென அலுவல் ஒதுக்கப்படலாம். அவ்வாறு ஒழுங்குப் புத்தகத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

---

✝* 1985 சனவரி 8 ஆந் தேதிய பன்னிரண்டாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் 1989 செப்தெம்பர் 6 ஆந் தேதிய இருபத்தி நான்காவது திருத்தத்தால் மீண்டும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

(6) பாராளுமன்றத்தின்முன் இடப்பட்ட கூட்ட அறிக்கைகள், பதிவேடுகள், சட்டமூலங்கள் ஏனைய ஆவணங்கள் அனைத்தினதும் பாதுகாப்பிற்கும் செயலாளர் நாயகம் பொறுப்பாவார். சபாநாயகர் அனுமதிக்கும் ஒழுங்கு வசதிகளின்கீழ் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றையோரும் இவற்றைப் பரிசீலனை செய்வதற்கு வசதியளித்தல் வேண்டும்.

### கூட்ட நடப்பெண்

10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 73 ஆம் உறுப்புரையின்படி பாராளுமன்றத்தின் கூட்ட நடப்பெண் தலைமை வகிப்பவர் உட்பட இருபது உறுப்பினர்களாகும். எந்நேரத்திலாவது கூட்ட நடப்பெண் இல்லை என்பது சபாநாயகரினதோ அல்லது தலைமை வகிப்பவரினதோ கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவர் வாக்கழைப்பு மணி அடிக்கக் கட்டளையிடுவார். ஐந்து நிமிடங்களின் முடிவில் கூட்ட நடப்பெண் காணப்படாத பட்சத்தில் அவர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தல் வேண்டும்.

11. முழுப் பாராளுமன்றக் குழுவிற்குரிய கூட்ட நடப்பெண் இருபாதாகும். முழுப் பாராளுமன்றக் குழுவில் கூட்ட நடப்பெண் இல்லையென்பது அவதானிக்கப்பட்டால் தவிசாளர் இதன் முன்னுள்ள கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளபடி நடவடிக்கை மேற்கொள்வார். கூட்ட நடப்பெண் காணப்படாதவிடத்து அவர் அக்கிராசனத்தை விட்டகன்று, பாராளுமன்றம் மீண்டும் கூடியதும், உடனடியாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணப்படுவர். அப்பொழும் கூட்ட நடப்பெண் இல்லாதிருப்பின் இதன் முன்னுள்ள கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளபடி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். ஆனால் கூட்ட நடப்பெண் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் பாராளுமன்றம் உடனே குழுநிலைக்கு மாறும்.

### பாராளுமன்ற நடவடிக்கைகள்

* 12. [பாராளுமன்ற அலுவல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரையெதுவும் உரையாற்றப்படும் மொழியிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவுசெய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவுசெய்யப்படும். அத்தகைய மொழியினை அறியாத உறுப்பினர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தல் சபாநாயகரின் கடமையாகும்.

அவ்வேற்பாடுகளில் அடங்கவேண்டியன –

(1) ஒழுங்குப்பத்திரம் சிங்கத்திலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுதல்;

(2) உரைகளையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் மற்றைய இரு மொழிகளிலும் சமகாலத்தில் உரைபெயர்தல்;

(3) பாராளுமன்ற விவாதங்களைப் பதிவுசெய்யும் அதிகார அறிக்கையின் முகப்புப் பக்கம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்படுதல்;

(4) உரைகள் அவை நிகழ்த்தப்படும் மொழிகளிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவுசெய்யப்படுவதுடன், உரை நிகழ்த்துபவரின் பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பதிவு செய்யப்படுதல்.]

---

• 1993 பெப்ரவரி 26 ஆந் தேதிய இருபத்தெட்டாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### ஒத்திவைப்பு

13. முன்னறிவித்தலின் பின் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மூலம் வேறொரு குறிப்பிட்ட தினத்திற்குப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும்படி பாராளுமன்றம் கட்டளை யிட்டாலொழிய பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பு என்பது அடுத்துவரும் சாதாரண அமர்வு தினம் வரை எனப் பொருள்படும். காலவரையறையின்றி ஒத்திவைக்கக்கோரும் பிரேரணை அனுமதிக்கப்படமாட்டாது.

14. நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஓர் ஒத்திவைப்புக் காலத்தில், பிரதம அமைச்சர் வேண்டினால், அவ்வேண்டுதலில் குறிப்பிடப்பட்டதும் ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்ட தினத்திற்கு முன்னதுமான ஒரு தினத்தில், பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகர் அறிவித்தல் விடுப்பார். அதனையடுத்து சபாநாயகரின் அறிவித்தலில் குறிப்பிட்டப்பட்ட தினத்திலும் நேரத்திலும் பாராளுமன்றம் கூடி, முறைப்படி அந்தத் தினமும் நேரமும் வரையுமே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது போல் கருதி அன்றைய அலுவல்களைக் கவனிக்கும். சபாநாயகர் இத்தகைய ஓர் அறிவித்தலை விடுக்கும்பொழுது பாராளுமன்றம் கூட்டப்படும் தினத்தையும் நேரத்தையும் உறுப்பினர்க்கு அறியத்தருவதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### தடங்கற் பிரேரணைகள்

15. ஒரு விவாதத்தையோ ஒரு விவாதத்தின்பொழுது பாராளுமன்றத்தையோ ஒத்தி வைக்குமாறு, அல்லது முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலாயின், குழுநிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்க வேண்டுமென்றோ அல்லது அவர் அக்கிராசன த்தை விட்டகல வேண்டுமென்றோ ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டால் அதுபற்றிய விவாதம் அத்தகைய பிரேரணையுடன் தொடர்புள்ள விடயத்திற்குட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். ஒரு விவாதத்தின்போது அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரித்த அல்லது வழிமொழிந்த உறுப்பினரொருவர் மீண்டும் ஒருமுறை அதே விவாதத்தில் அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரிக்கவோ வழிமொழியவோ அருகதையற்றவராவார்.

16. ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவ்விவாதத்தினை அல்லது பாராளுமன்றத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலாயின் குழுநிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்க வேண்டுமென்றோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்றோ பிரேரிக்கப்பட்ட பிரேரணையொன்று பாராளுமன்றத்தின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்வதாயுள்ளது என்று சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் வேறு உறுப்பினர் அல்லது முழுப் பாராளுமன்றக் குழுத் தவிசாளர் கருதுமிடத்து அவர் உடனடியாகவே அக்கிராசனத்திலிருந்து அப்பிரேரணையை பாராளுமன்றத்திற்கு விடலாம்; அல்லது அப் பிரேரணையை பாராளுமன்றத்திற்கு எடுத்தியம்பாமல் இருக்கலாம்.

### அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தையொட்டி ஒத்திவைப்பு

• 17. [(1) பொது அலுவல் எடுத்துக்கொள்ளப்படும்வரை (அமைச்சரவை அமைச்ச ரொருவராலன்றி) பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்க முடியாது. ஆனால், கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையி லிருந்து எழுந்துநின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்தும் வாய்ந்த விடயமொன் றினை எடுத்துரைத்து, அவ்வலுவலை விவாதிப்பதற்காக பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் பட்சத்தில் பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை பிரேரிக்கப்படலாம்.

(2) (அ) சம்பந்தப்பட்ட பிரேரணையைப் பிரேரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தினத்தன்று அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அப் பிரேரணை பற்றிச் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றாலன்றி;

(ஆ) உறுப்பினர் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றலான்றி; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றாலன்றி;

உறுப்பினரொருவர் அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரிக்க இயலாது.

எனினும், சபாநாயகர் இணங்க மறுக்குமிடத்து அல்லது விவாதிப்பதற்கு உத்தேசிக்கப் பட்ட பிரேரணை ஒழுங்கற்றதென அபிப்பிராயப்படுமிடத்து அவர் அப் பிரேரணை பற்றிய முன்னறிவித்தலை வாசிப்பதற்கு அனுமதி வழங்கி அதன்பின்னர் சபாநாயகர் அதற்கு இணங்க மறுத்தமைக்கான அல்லது ஒழுங்கற்றதென அபிப்பிராயப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடலாம்.]

✣* [(3) பிரேரணை அவ்வாறு ஆதரிக்கப்பட்டால் அல்லது அதற்குப் பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அது பி.ப. 2.30 மணிவரை தள்ளிவைக்கப் பெறுதல் வேண்டும்.]

(4) எந்த ஒரு தினத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய பிரேரணைக்கு அனுமதி கோரலாகாது.

✣* [(5) அரசாங்க அலுவல்களுக்கு முன்னிடம் அளிக்கப்படும் தினங்களில், இக் கட்டளையின்படி கொண்டுவரப்படும் பிரேரணையைத் தவிர அத்தினத்திற் குறிக்கப் பட்டுள்ள அலுவல்களுக்கிடையே பி.ப. 3.30 மணிக்கு முன்பாக பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான எப்பிரேரணையையும் அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் கொணர்ந்தாலன்றிப் பிரேரிக்கவியலாது;]

### புறத்தோர்

18. (1) சபாநாகயகர் இதற்கென வகுக்கும் விதிகளுக்குமைய தமக்கு ஒதுக்கப்படும் இடங்களில் “புறத்தோர்” பாராளுமன்றச் சபையில் சமுகமாயிருக்கலாம்.

---

• 1985 சனவரி 8 ஆந் தேதிய பதின்மூன்றாம் திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

✣* 1989 செப்தெம்பர் 06 ஆந் தேதிய இருபத்தைந்தாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

(2) பாராளுமன்றத்தின் எவ்வமர்வின்போதாவது அல்லது குழுநிலையின்போதாவது புறத்தோர் சமுகமாயிருக்கின்றனரென எவ்வுறுப்பினராவது குறிப்பிட்டால், (சந்தர்ப்பத்திற் கமைய) சபாநாயகர் அல்லது தவிசாளர் “புறத்தோர் பாராளுமன்றச் சபையை விட்ட கலுமாறு கட்டளையிடப்படுவதாக” என்ற கேள்வியை விவாதத்தையோ திருத்தத்தையோ அனுமக்காது உடனடியாக விடுத்தல் வேண்டும்.

எனினும், சபாநாயகரோ அல்லது தவிசாளரோ தாம் உகந்ததெனக் கருதும் எவ்வேளை யிலும் பாராளுமன்றச் சபையின் எப்பகுதியிலிருந்தும் புறத்தோர் வெளியேற வேண்டு மெனக் கட்டளையிடலாம்.

எனினும், அரசியலமைப்பின் 77ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தில் கடமைகளை மேற்கொண்டிருக்கும் சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி புறத்தோர் எனக் கருதப்படமாட்டார்.

(3) சபாநாயகர் எந்தவொரு செய்திச் சாதனத்தின் பிரதிநிதிக்கோ அல்லது பிரதிநிதிகளுக்கோ பாராளுமன்றம் அமரும் நாட்களில் சமுகமளிப்பதற்குப் பொது அனுமதி ஒன்றை வழங்கலாம். சபாநாயகரது கருத்துப்படி கூட்ட நடவடிக்கைகள் பற்றி அச்செய்திச்சாதனம் நேர்மையற்ற அறிக்கைகயை வெளியிட்டால் அத்தகைய அனுமதியை இல்லாமலாக்கலாம்.

### பாராளுமன்ற அலுவல்

* 19. [பாராளுமன்றத்தின் அலுவல் பின்வரும் ஒழுங்குமுறையில் நடாத்தப்படும் :-

(1) புதிய உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்தல்.

(2) சனாதிபதியின் செய்திகள்.

(3) சபாநாயகரின் அறிவித்தல்கள்.

(4) பத்திரங்கள் சமர்ப்பித்தல்.

(5) குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

(6) மனுக்கள்.

(7) கேள்விகள்.

(8) அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்கள்.

(9) சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள்.

(10) அமைச்சு சம்பந்தப்பட்ட கூற்றுக்கள்.

(11) தனிப்பட்ட விளக்கங்கள்.

(12) சிறப்புரிமைக் கேள்விகள்.

(13) முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்.

(14) முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்.

(15) பொது அலுவல்கள்.]

---

• 1981, நவம்பர் 3 ஆந் தேதிய நான்காவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**பொது அலுவல்**

20. (1) பொது அலுவல் தினப் பணிகளையும் பிரேரணைகளின் முன்னறிவித்தல் களையும் கொண்டிருக்கும்.

(2) குறித்த ஒரு தினத்தில் பலிசீலனைக்கு எடுப்பதற்குப் பாராளுமன்றம் பணித்த ஒரு சட்டமூலமோ வேறு விடயமோ தினப் பணி ஆகும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தினத்திற்கு முன்னைய தினமொன்று பதிலீடு செய்யப்படலாகாது.

(3) ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வைத் தவிர்ந்த ஒவ்வொரு நாளிலும் அராசங்க அலுவல் முன்னீடடையும்.

(4) ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வின்போது "இன்று அரசாங்க அலுவல் முன்னீடடையுமாக" என்றோ "இன்று அரசாங்க அலுவலில் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடையுமாக" என்றோ பொது அலுவல் ஆரம்பிக்கையில் முன்னறிவித் தலின்றி ஒரு பிரேரணையைத் திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிப்பதற்கு அமைச்சரவையின் ஓர் அமைச்சர் பிரேரிக்கலாம். அப்பிரேரணை நிறைவேறின், அரசாங்க அலுவல் அல்லது அலுவலின் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடைதல் வேண்டும்.

(5) அரசாங்க அலுவல், அரசாங்கம் உகந்ததெனக் கருதும் ஒழுங்கில் வகுக்கப்படும்.

(6) பாராளுமன்றம் பிறவாறு பணித்தாலன்றி ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வுகளில் அரசாங்க அலுவலிலும் பார்க்கத் தனியார் உறுப்பினர் அலுவல் முன்னீடயையும்; அத்தினங்களில் திருப்பணிகளை விடப் பிரேரணை முன்னறி வித்தல்கள் முன்னீடடையும்.

(7) தனியார் உறுப்பினர் பிரேரணை முன்னறிவித்தலை கொடுக்கும் ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு தனியார் உறுப்பினர்களின் தினத்திற்கு அந்தப் பிரேரணை ஒதுக்கப்பட வேண்டுமென்ற அவரது விருப்பத்தைத் தெரிவித்தாலன்றி எல்லாத் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகளும் அடுத்துவரும் தனியார் உறுப்பினர்கள் தினத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். அத்தகைய எல்லாப் பிரேரணைகளும் ஒழுங்குப் பத்திரத்தில் அவை காணப்படும் ஒழுங்கில் எடுக்கப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்பொழுது எஞ்சிநிற்கும் எல்லாத் தினப் பணிகளையும் அடுத்த அமர்வுதினம் வரை அதற்கான ஒரு பிரேரணை இன்றியே பிற்போடல் வேண்டும். பரிசீலனைக்கு எடுபடாத எல்லாப் பிரேரணை முன்னறிவித்தல்களும் அம்முன்னறிவித்தல் எவ்வுறுப்பினரது பெயரில் உள்ளதோ அவரின் குறிப்பான பணிப்பெதுவும் இல்லாதவிடத்து ஓர் அமைச்சருடைய அல்லது பிரதி அமைச்சருடைய பெயரில் இருக்குமாயின் அடுத்த அமர்வு தினத்திற்கும் தனி உறுப்பினரொருவரின் பெயரில் இருக்குமாயின் அடுத்த மாதத்தில் பாராளுமன்றம் அமரும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வுக்கும் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பத்திரங்கள்**

22. (1) சபாநாயகர், அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் மாத்திரமே பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(2) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் கூட்ட அறிக்கையில் பதிவு செய்யப் படல் வேண்டும்.

(3) பத்திரங்கள் சமர்ப்பிக்கையில் அவற்றின் உள்ளடக்கம் பற்றிச் சிறிய விளக்கக் கூற்று சமர்ப்பிக்கப்படலாம். ஆனால் சமர்ப்பிக்கும்போது விவாதம் நிகழலாகாது.

(4) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் சபாபீடத்தில் இடப்படுமாறு கட்டளையானவையாகக் கருதப்படுவதுடன் அவற்றை அச்சிடக்கோரும் எப்பிரேரணையும் திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படும்.

### முன்னறிவித்தல்கள்

23. (1) முன்னறிவித்தல் கொடுக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்ட கேள்விகள் அல்லது பிரேரணைகள் பற்றிய முன்னறிவித்தல்கள், எழுத்துமூலம் செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்டுக் கொடுக்கப்படல் வேண்டும். பாராளுமன்றம் அமரும் நாட்களில் எந்நேரத்திலும் அத்தகைய முன்னறிவித்தல்களைச் செயலாளர் நாயகத்திடம் கொடுக்கலாம்; அல்லது எந்நேரத்திலும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பலாம்; அல்லது அங்கு கொடுக்கலாம்.

(2) சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலன்றிச் செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாக் கேள்விகளும் அத்தகைய அறிவித்தல் கொடுத்த தினத்திலிருந்து ஏழு முழு நாட்களுக்கு முற்படாத ஒரு தினத்திற்கு விடையளிக்கப்படுதற் பொருட்டு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

எனினும், பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றுடன் தொடர்புள்ள கேள்வியொன்று கேள்விகள் முடிவடையும் போது சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் போதுமான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர் எதிர்க்கட்சித் தலைவரினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவரினாலோ கேட்கப்படலாம்.

(3) சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலன்றி செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாப் பிரேரணைகளையும் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்த்தல் வேண்டும். ஆனால் பாராளுமன்றம் பிறவாறு கட்டளையிட்டாலன்றி முன்னறிவித்தல் செய்து ஐந்து முழு நாட்கள் கழியுமுன் அவற்றின் மீது விவாதமெதுவும் நிகழமுடியாது. இப்பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பொது அலுவல் ஆரம்பத்தின் போது பிரேரிக்கப்படவுள்ள பிரேரணைகளின் முன்னறிவித்தல்கள் முன்னைய அமர்வுநாளில் சபாபீடத்தில் கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றை ஒழுங்குப்பத்திரத்தில் சேர்த்தல் வேண்டும்.

(4) எவ்விடயத்திற்கும் முன்னறிவித்தல் கொடுப்பதில் விவாதம் நிகழலாகாது.

(5) இந்நிலையியற் கட்டளைகள் பிறவாறு அனுமதித்தாலொழிய ஒழுங்குப் பத்திரத்திற் காணப்படும் ஒரு பிரேரணை மீதோ அல்லது ஒரு தினப்பணிப்பு மீதோ அல்லாது ஒரு விவாதம் நிகழலாகாது.

(6) கேள்வி அல்லது பிரேரணை பற்றிய முன்னறிவித்தல் கொடுத்த ஒரு உறுப்பினர் அதனைச் செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் முன்னறிவித்தல் கொடுத்து மீட்கலாம்.

24. நிலையியற் கட்டளைகள் பிறவாறு பணித்தாலன்றிச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள எப்பிரேரணைக்கும் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். பின்வருவன புறநடைகளாகும்.-

(1) முழுப் பாராளுமன்றக் குழுவில் பிரேரிக்கப்படும் ஒரு பிரேரணை;

(2) பாராளுமன்றத்தை அல்லது ஏதாவது விவாதத்தை ஒத்திவைப்பதற்கான பிரேரணை;

(3) தெரிகுழுவொன்றின் அறிக்கையை முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தலோ அல்லது அச்சிடவோ கோரும் ஒரு பிரேரணை;

(4) புறத்தோரை வெளியேற்றுவதற்கான ஒரு பிரேரணை;

(5) ஓர் உறுப்பினரை இடைநிறுத்தி வைக்கக் கோரும் ஒரு பிரேரணை;

(6) ஒரு சிறப்புரிமை விடயத்தையொட்டி ஒரு பிரேரணை;

(7) ஒரு தினத்தில் அலுவலொன்று முடிவாக்கப்பட்டவுடனும் வேறு புதிய விடய ங்கள் ஆரம்பிக்கப்படுமுன்னரும் அவ்வலுவலிலிருந்து விளையும் ஒரு பிரேரணை;

(25) மற்றெல்லாப் பிரேரணைகள் தினப்பணிகள் ஆகியவற்றிலும் பார்க்கப் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஓர் அவசரப் பிரேரணை முன்னீடடையும். வாக்கெடுப்பு நிகழ்ந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்ந்த வேறு எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஒரு விடயம் அண்மையில் தோன்றியிருக்கும்போது சிறப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரேரணை மூலம் பாராளுமன்ற நடவடிக்கை இடை மறிக்கப்படலாம்.

**மனுக்கள்**

* [25அ. (1) பாராளுமன்றத்திற்குச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்ட ஒரு மனு வடிவத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு மனுவும் ஓர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மனுவும் மதிப்பான வார்த்தைகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பொருத்தமற்ற கூற்றுக்களைக் கொண்டிருத்தலுமாகாது.

(3) ஒவ்வொரு மனுவும் தெளிவாகவும் வாசிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டு மென்பதுடன், கோருவதான நிவாரணத்தை எடுத்துரைக்கும் வேண்டுதல் ஒன்றுடன் அது முடிதலும் வேண்டும்.

(4) நோய் காரணமாக இயலாமை விடயத்தில் தவிர, ஒவ்வொரு மனுவும், மனுதாரரால் அல்லது மனுதாரர்களால் ஒப்பமிடப்படுதல் வேண்டும். எழுத இயலாத ஆள் ஒருவர், சாட்சி யொருவரின் முன்னிலையில் தனது அடையாளத்தை இடுதல் வேண்டும். மனு ஒன்றின் கையொப்பக்காரர் ஒவ்வொருவரினதும் முழுப்பெயரும் முகவரியும் அதில் குறிப்பிடப் படுதல் வேண்டும்.

(5) மனு எதனோடும் கடிதங்கள், சத்தியக்கடதாசிகள் அல்லது பிற ஆவணங்கள் எதனையும் இணைத்தல் ஆகாது.

(6) மனுவொன்றில் பாராளுமன்ற விவாதம் எதனையும் குறிப்பிடுதலாகாது.

(7) உறுப்பினர் ஒருவர் தன்னுடைய மனுவொன்றைச் சமர்ப்பிக்கத் தகுதி வாய்ந்தவராதலாகாது. ஆனால் அதனைப் பிறிதோர் உறுப்பினர் சமர்ப்பிக்கலாம்.

(8) ஒவ்வொரு மனுவும் சமர்ப்பிக்கப்படுமுன்னர், அதன் ஆரம்பத்தில் அதற்குப் பொறு ப்பாயிருக்கும் உறுப்பினரால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குறைந்தபட்சம் இரு முழு நாட்களுக்குச் செயலாளர் நாயகத்திடம் அதனை இட்டுவைத்தல் வேண்டும். செயலாளர் நாயகம் அதனை அங்கீகாரத்துக்கெனச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டாலன்றி மனு எதுவும் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

---

• 1981, நவம்பர் 3 ஆந் தேதிய இரண்டாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

(9) மனு ஒன்றைச் சமர்ப்பிக்கும் உறுப்பினர் ஒருவர் பின்வரும் முறையிலான கூற்றொன்றுக்கு தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

"சபாநாயகர் அவர்களே ! ................................ என்னும் இடத்தைச் சேர்ந்த
(முகவரி)
................................* என்பவரிடமிருந்து / ஏனைய ............. ஆட்களிடமிருந்தும் வந்துள்ள
(மனுதாரரின் பெயர்)
மனு ஒன்றைச் சமர்ப்பிக்கிறேன்.

இக்கூற்றின்மீது விவாதம் எதையும் அனுமதித்தல் ஆகாது.

(10) மனு ஒன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டால் அது பொது மனுக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தியதாதல் வேண்டும்.]

**கேள்விகள்**

26. அலுவல் ஒழுங்கில் இந்நிலையியற் கட்டளைகள் வசதியளிக்கும் கட்டத்தில் கேள்வி கேட்கப்படும் அமைச்சருடன் அமைச்சுரீதியில் பொறுப்பாயுள்ள விடயங்கள், சனாதிபதியினால் அவருக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பான பொது விடயங்களையொட்டிய கேள்விகளைப் பிரதம அமைச்சரிடமோ அல்லது வேறு அமைச்சரிடமோ கேட்கலாம்.

27. (1) கேள்வியொன்றுக்கு வாய்மூல விடை கோருமிடத்து, ஒழுங்குப் பத்திரத்தில் அக்கேள்விக்குரிய முறை வந்ததும் சபாநாயகர் அக்கேள்விக்குரிய உறுப்பினரின் பெயரை அழைக்க வேண்டும்; அவ்வண்ணம் அழைக்கப்பட்ட உறுப்பினர் தமது இடத்தில் எழுந்து நின்று ஒழுங்குப்பத்திரத்திலுள்ள அக்கேள்வியின் இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் கேள்வியினைக் கேட்டல் வேண்டும்; அதன் பின் அக்கேள்விக்குரிய விடை அக்கேள்வி கேட்கப்படும் பிரதம அமைச்சரால் அல்லது அமைச்சரால் அளிக்கப்படும்.

(2) கேள்வியொன்றுக்கு எழுத்து மூலம் விடை கோருமிடத்து அக்கேள்வி கேட்கப்படும் பிரதம அமைச்சர் அல்லது அமைச்சர் அதற்குரிய விடையைப் பாராளுமன்ற விவாதங்கள் பதிவு செய்யப்படும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) அச்சிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

28. (1) வாய்மூல விடையளிக்கப்பட்ட எவ்விடயத்தினதும் பொருளை மேலும் விளங்கிக் கொள்ளும் பொருட்டு எவ்வுறுப்பினரும் உப கேள்வியைக் கேட்கலாம்.

எனினும், எவ்விடை மீதும் மூன்றுக்கு மேற்பட்ட உப கேள்விகள் கேட்கப்படலாகாது.

எனினும், கேள்விகளை அனுமதித்தல் பற்றிய விதிகளை எந்தவொரு உபகேள்வியும் மீறுவதாகச் சபாநாயகர் கருதினால் அவ்வுபகேள்வியை அவர் மறுக்க வேண்டும்.

(2) மூலக் கேள்வியில் உள்ளடக்கப்படாத விடயத்தினை ஓர் உபகேள்வி மூலம் புகுத்தக் கூடாது.

29. (1) கேள்வி கேட்கப்படும் அமைச்சரின் தனி அறிவிற்குட்பட்ட ஓர் உண்மையான விடயத்தினைப் பற்றிய தகவலைப் பெறுதல் அல்லது நடவடிக்கை எடுக்கும்படி தூண்டுதல் ஒரு கேள்வியின் தகுந்த நோக்கமாகும்.

(2) கேள்வியொன்றினை விவாதத்திற்குச் சாட்டாக்கிக் கொள்ளக் கூடாது.

30. எந்த ஒரு தினத்திலும் கேள்விகளுக்கென அரைமணித்தியாலத்திற்குமேல் ஒதுக்கப்படலாகாது. எந்தவொரு தினத்திலும் ஓர் உறுப்பினர் மூன்றுக்கு மேற்பட்ட வாய்மூல விடைக்கான கேள்விகளைக் கேட்கலாகாது.

31. கேள்வி கேட்கும் உரிமை பின்வரும் விதிகளுக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்:-

(1) ஒரு கேள்வியில் ஒன்றுக்கு மேற்பட்ட விடயம் இடம்பெறலாகாது. ஒரு கேள்வி 150 சொற்களுக்கு மேற்படலாகாது.

(2) கேள்விகளை விளங்கிக்கொள்வதற்குக் கண்டிப்பாகத் தேவைப்படாத ஒரு பெயரையோ கூற்றையோ அக்கேள்வியில் வெளியிடலாகாது.

(3) கேள்வியொன்று கூற்றொன்றினை உள்ளடக்கியதாயிருந்தால் அத்தகைய கூற்றுச் சரியானதா என்பதற்கு அக்குள்வியினைக் கேட்கும் உறுப்பினரே பொறுப்பேற்றல் வேண்டும்.

(4) வாதம், ஊகம், காரணம்கற்பித்தல், அடைமொழி, வஞ்சப் புகழ்ச்சியான சொற்றொடர் ஆகியன ஒரு கேள்வியில் இடம் பெற்றிருத்தலாகாது.

(5) குழுவொன்றின் அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு முன்னிடப்படாத அக் குழுவின் நிகழ்ச்சிகளையொட்டி ஒரு கேள்வி கேட்கப்படலாகாது.

(6) சட்ட நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குட்பட்டுள்ள அல்லது சட்டமுடிவை எதிர்நோக்கியுள்ள எவ்விடயமும் ஒரு கேள்வியில் இடம்பெறலாகாது.

(7) கருத்துத் தெரிவிக்கும்படியோ, யதார்த்தமற்ற ஒரு சட்டப் பிரச்சினைக்கு அல்லது ஓர் அனுமான நிலைக்கு பரிகாரம் கோரியோ கேள்வி கேட்கலாகாது.

(8) தனிப்பட்ட ஒருவரது பொது அல்லது உத்தியோக முறை சம்பந்தப்படாத ஒழுக்கத்தையோ நடத்தையையோ ஒட்டிய கேள்வி கேட்கலாகாது.

(9) ஒரு தன்னிலைப் பிரேரணையினால் மட்டுமே வினாவெழுப்பக்கூடிய எந்தவோர் ஆளினதும் ஒழுக்கத்தை அல்லது நடத்தையைப் பிரதிபலிக்கக் கூடிய கேள்வி கேட்கலாகாது.

(10) ஒருவரின் சொந்த ஒழுக்கம் பற்றி நேரடியாகவோ உள்ளார்த்தமாகவோ குற்றம் சுமத்தும் கேள்வி அனுதிக்கப்படமாட்டாது.

(11) ஒரு கூட்டத்தொடரில் முற்றாக விடையிறுக்கப்பட்ட ஒரு கேள்வியை அதே கூட்டத்தொடரில் மீண்டும் கேட்கலாகாது.

32. (1) இந்நிலையியற் கட்டளைகளின் கீழ் ஒரு கேள்வியை அனுமதிக்கலாமா இல்லையா என்பதைச் சபாநாயகர் தீர்மானிப்பார். கேள்வி கேட்கும் உரிமையைத் துர்ப்பிரேயோகம் செய்வதாயுள்ளதென்றோ பாராளுமன்றத்தின் நடவடிக்கையைத் தடைப் படுத்தும் அல்லது குந்தகமான முறையில் பாதிக்கும் நோக்கம் கொண்டதென்றோ தாம் அபிப்பிராயப்படும் எந்தொவரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்கலாம். இந்நிலையியற் கட்டளைகள் எவற்றையாவது மீறும் எந்தவொரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்க வேண்டும். சபாநாயகர் ஒரு கேள்விக்கு அனுமதி மறுத்தால் அம்மறுப்பை அதற்குரிய காரணத்தோடு, செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) முன்னறிவித்தலெதிலும் தகாத சொற்றொடர்கள் இருந்தால் அல்லது அது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு முரணானதாயிருந்தால் ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படுமுன்னர் கேள்விகேட்கும் உறுப்பினரின் உடன்பாட்டுடன் சபாநாயகர் அதைத் திருத்தியமைக்கலாம்.

**விவாதத்திற்குரிய விடயங்கள்**

33. பொதுமக்களின் அக்கறையொட்டிய எவ்விடயம் பற்றியும் எந்தவொரு பிரேரணையையும் உறுப்பினரொருவர் பிரேரிப்பதற்குத் தகுதியுடையர். அத்தகைய பிரேரணை இந்நிலையியியற்கட்டளைகளுக்கமைய விவாதிக்கப்படவோ வேறெவ்வழியி லேனும் முடிவுகாணப்படவோ வேண்டும்.

34. (1) இந்நிலையியற் கட்டளைகளுக்கமைய ஒரு பிரேரணையோ திருத்தமோ வழிமொழியப்படவேண்டியததானால் அவ்வாறு வழிமொழியப்படாத பட்சத்தில் அது காலாவதியாகும்.

(2) தமது பெயரிலிருக்கும் ஒரு பிரேரணையைப் பிரேரிக்கும்படி அழைக்கப்படு மிடத்து ஒரு தனியார் உறுப்பினர் அவ்வாறு பிரேரிக்காது விட்டால் அது காலாவதியாகும்; ஆனால் அவர் எழுத்துமூலம் அதிகாரம் அளித்த இன்னொரு உறுப்பினர் அவருக்காக அப்பிரேரணையைப் பிரேரிக்கலாம்.

எனினும், ஒரு தினப்பணிப்புக்குப் பொறுப்பாயுள்ளள ஓர் உறுப்பினர் பிறிதோர் தினத்திற்கு அத்தினப் பணிப்பைப் பின்போடவேண்டுமென்ற தமது விருப்பத்தை முன் கூட்டியே செயலாளர் நாயகத்துக்குத் தெரிவித்திருந்தாலன்றி எந்த ஒரு உறுப்பினரும் அத்தினப் பணிப்பைப் பிரேரிக்கலாம்.

35. ஒரு பிரேரணையைப் பிரேரித்த ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் அப்பிரேரணையை மீட்கலாம்.

**எதிர்நோக்கல்**

36. (1) பரிசீலனைக்குக் குறிக்கப்பட்ட ஒரு சட்டமூலத்தின் அல்லது தினப் பணிப்பின் பொருளை அனுசரித்த ஒரு பிரேரணையைச் சமர்ப்பிப்பதோ அல்லது திருத் தத்தைப் பிரேரிப்பதோ ஒழுங்கற்றதாகும். முன்னறிவித்தல் கொடுத்த ஒரு பிரேரணையின் பொருளை அனுசரித்துப் பிரேரிக்கப்படும் ஒரு திருத்தமும் ஒழுங்கற்றதாகும்.

(2) ஒரு தினப்பணி பிரேரணை முன்னறிவித்தல் அல்லது முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட திருத்தப் பிரேரணை ஆகியவற்றைப் பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணையின் மீதோ அல்லது வேறேதும் விவாதத்தின் மீதோ எதிர்நோக்கலாகாது.

(3) எதிர்நோக்கலின் காரணத்தைக் கொண்டு ஆராய்வொன்றை ஒழுங்கற்றதெனச் சபாநாயகர் தீர்மானிக்கையில் அவ்வாறு எதிர்நோக்கப்பட்ட விடயம் ஒரு குறிப்பிட்டகால வெல்லைக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாவெ ன்பதை அவர் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

**திருத்தங்கள்**

37. அக்கிராசனத்திலிருந்து எடுத்தியம்பப்படுமிடத்து -

(அ) வேறு சில சொற்களைச் சேர்ப்பதற்காகச் சில சொற்களை நீக்கவேண்டு மென்றோ;

(ஆ) சில சொற்களை நீக்கவேண்டுமென்றோ;

(இ) வேறு சொற்கள் புகுத்தப்பட அல்லது சேர்க்கப்பட வேண்டுமென்றோ அப்பிரேரணை திருத்தப்படலாம்.

38. (1) ஒவ்வொரு திருத்தமும் அதனைப் பிரேரிக்கும் உறுப்பினரால் எழுத்துமூலம் செயலாளர் நாயகத்துக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

(2) சட்டமூலம் ஒன்றின்மீது கொண்டுவரப்படும் ஒவ்வொரு திருத்தமும் அரசியலமைப்பின் 77ஆம் உறுப்புரைக்கமையச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(3) எடுத்தியம்பப்படும் திருத்தமொன்று பிரேரிக்கப்பட்ட பிரேரணைக்குப் பொருத்த முடையதாயித்தல் வேண்டும்.

(4) பாராளுமன்றத்தின் விதிகளுக்கமைய முன்னறிவித்தல் பெற்ற ஒரு தன்னிலைப் பிரேரணைமூலம் மாத்திரமே எழுப்பக்கூடிய ஒரு பிரச்சினையை ஒரு திருத்தப் பிரேரணை மூலம் எழுப்பலாகாது.

(5) ஒரு பிரேரணையின் ஏதாவது ஒரு பகுதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தத்திற்குரிய முடிபு வழங்கப்பட்டதன் பின்னர் அப்பகுதிக்கு முன்னதாக உள்ள பகுதியைத் திருத்த முடியாது.

(6) இதேபோல், அக்கிராசனத்திலிருந்து ஒரு பிரேரணையின் ஏதாவது பகுதிக்குத் திருத்தம் எடுத்தியம்பப்பட்டால் அத்திருத்தம் மீட்கப்பட்டாலன்றி அப்பகுதிக்கு முன்னதாக வுள்ள ஒரு பகுதியைத் திருத்தமுடியாது.

(7) ஒரு பிரேரணை தொடர்பான திருத்தம் ஏதாவதொரு சட்டமூலத்தில் அல்லது ஒரு விடயத்தின் குறிப்பிட்ட ஒரு பருவத்தில் அதுபோன்ற ஒரு திருத்தம் தொடர்பாக ஏற் கெனவே செய்யப்பட்ட ஒரு முடிவுக்கு முரணானதாயிருத்தலாகாது.

(8) அக்கிராசனத்திலிருந்து திருத்தமொன்று எடுத்தியம்பப்படுமிடத்து அத்திருத்தத் திற்குத் திருத்தம் பிரேரிக்கப்படலாம்.

39. (1) வேறு சொற்களைப் புகுத்துவதற்காகச் சில சொற்களை நீக்கிவிடவேண்டு மென்பதே திருத்தமாயின், சபாநாயகரோ அல்லது தவிசாளரோ, அத்திருத்தத்தினைக் குறிப்பிட்டு ”நீக்கப்படவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட சொற்கள் பிரேரணையின் அல்லது வாசகத்தின் ஒருபகுதியாக இருக்குமாக” என முதலில் எடுத்தியம்புவார். அப்பிரே ரணை சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டால் “திருத்தத்தில் பிரேரிக்கப்பட்ட அச்சொற் கள் அங்கு சேர்க்கப்படுமாக” என்ற பிரேரணையை அவர் எடுத்தியம்புதல் வேண்டும்.

எனினும், ஒழுங்கின்பாற்பட்டு இதன்பின்னர் பிரேரிக்கக்கூடியதான ஒரு திருத்தத்தி னைத் தடைசெய்யாத் தன்மையினவாய சொற்களை மாத்திரமே ஒரு திருத்தத்தில் சாத்தியமானால் சபாநாயகரோ அல்லது தவிசாளரோ பரீட்சார்த்தப் பிரேரணையாகச் சபைக்கு விடவேண்டும். அவ்வாறு எடுத்தியம்பப்பட்ட பிரேரணை நிராகரிக்கப்பட்டால் நீக்கப்படவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட திருத்தத்தின் எஞ்சிய சொற்கள் மேலுமொரு பிரேரணையின்றியே நீக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(2) சில சொற்களை நீக்கிவிடவேண்டுமென்பதே திருத்தமாயின், சபாநாயகரோ அல்லது தவிசாளரோ அத்திருத்திருத்தினைக் குறிப்பிட்டு “நீக்கப்படவேண்டுமெனப் பிரேரி க்கப்படும் சொற்கள் பிரேரணையின் அல்லது வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக” என்ற பிரேரணையை எடுத்தியம்ப வேண்டும்.

(3) வேறு சொற்கள் புகுத்தப்பட அல்லது சேர்க்கப்பட வேண்டுமென்பது திருத்தமாயின் சபாநாயகரோ அல்லது தவிசாளரோ அத்திருத்தத்தினைக் குறிப்பிட்டு “பிரேரிக்கப்பட்ட சொற்கள் அங்கு புகுத்தப்படவேண்டும் அல்லது சேர்க்கப்படவேண்டும்” என்ற பிரேரணையை எடுத்தியம்ப வேண்டும்.

(4) இக்கட்டளையின் முற்போந்த பந்திகளின் ஏற்பாடுகளினாற்றடைபெறாமல் அவற்றில் குறிப்பிடப்பட்ட பிரேரணை அல்லது பிரேரணைகளுக்குப் பதிலாக "திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணையை சபாநாயகர் எடுத்தியம்பலாம்.

(5) பிரேரிக்கப்பட்ட ஒரு திருத்தத்திற்கு வேறொரு திருத்தம் பிரேரிக்கப்பட்டால் முன் கூறப்பட்ட திருத்தத்தின் மீதான எல்லாத் திருத்தங்களும் முடிவாக்கப்படும்வரை அதுவே மூலப்பிரேரணையாகக் கருதப்படும்.

40. ஒரு பிரேரணையின் மீதான விவாதமுடிவில் சந்தர்ப்பத்திற்கமைய அப் பிரேரணையின் மூல அமைப்பிலோ அல்லது திருத்தப்பட்டவாறோ அப்பிரேரணையைச் சபாநாயகர் அல்லது தவிசாளார் குறிப்பிட்டு அதனைச் சபைக்கு விடவேண்டும்.

### விவாதமுற்றுக்கள்

41. (1) ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டதன்பின்னர் ஓர் உறுப்பினர் தனது இட த்தில் எழுந்து நின்று "பிரேரணை இப்போழுது சபைக்கு விடப்படுமாக" எனப் பிரேரிக்க உரிமை கோரலாம். அப்பிரேரணை பாராளுனம்றதின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்வதாகவோ சிறுபான்மையினரின் உரிமைகளை மீறுவதாகவோ அக்கிராசனத்திற்குத் தோன்றினாலன்றி "பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படுமாக" என்ற பிரேரணை உடனடியாக சபைக்கு விடப்படல் வேண்டும்.

(2) "பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படுமாக" என்ற பிரேரணை நிறைவேற் றப்பட்டு அதன்விளைவான பிரச்சினை தீர்க்கப்பட்டதும் ஏற்கனவே அக்கிராசனத்தால் எடுத்தியம்பப்பெற்ற எந்தவொரு பிரேரணையிலும் தீர்வுகாணத் தேவைப்படும் மேற்கொ ண்ட பிரேரணையெதுவும் பிரேரரிக்கப்படலாம். (முன்கூறப்பட்டபடி அக்கிராசனத்தின் இணக்கம் மறுக்கப்படாத பட்சத்தில் மாத்திரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்).

(3) ஒரு வாசகத்தினைப் பரிசீலனை செய்யும்போது "பிரேரணையில் வரையறுக்கப் பட்டுள்ள சில சொற்கள் அவ்வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" அல்லது "அவ்வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" அல்லது "சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" என்ற பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படவேண்டுமெனப் பிரேரிக்கலாம். (முன்கூறப்பட்டபடி அக்கிராசனத்தின் இணக்கம் மறுக்கப்படாத பட்சத்தில் மாத்திரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்).

(4) இக்கட்டளையின்கீழ் பிரேரிக்கப்படும் ஒவ்வொரு பிரேரணையும் உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(5) பாரளுமன்றத்தில் அல்லது முழுப் பராளுமன்றக் குழுவில் இக்கட்டளையின் கீழான பிரேரணையொன்றில் வாக்கெடுக்கும்பொழுது அதற்குச் சாதகமாக இருபதுக்குக் குறைவான உறுப்பினர் பெரும்பான்மையாக வாக்களித்துள்ளதாகத் தெரிந்தால் அப்பிரேரணை நிறைவேறியதாகாது.

(6) நிலையியற் குழுவொன்றில் இக்கட்டளையின் கீழான பிரேரணையொன்று பிரேரிக்கப்படலாம். ஆனால் வாக்கெடுப்பில் அதற்குச் சாதகமாக அக்குழுவின் கூட்டநடப் பெண்ணுக்குக் குறைவான உறுப்பினர்கள் பெரும்பான்மையாக வாக்களித்துள்ளதாகத் தெரிந்தால் அப்பிரேரணை நிறைவேறியதாகாது.

## வாக்களிப்பு

42. சபாநாயகர் ஒரு பிரேரணையைச் சபைக்குவிட்டு 'ஆம்', 'இல்லை' என்ற குரல்க ளிலிருந்து வாக்கெடுப்பின் முடிவைப் பிரகடனப்படுத்தலாம். பிரேரணையின் முடிபு பற்றிய சபாநாயகரின் அபிப்பிராயத்தை ஓர் உறுப்பினர் ஏற்க மறுக்குமிடத்து இரு நிமிடங் களுக்கு வாக்கழைப்பு மணி அடிக்கப்பட்டு 43 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கமையப் பின்வரும் வகைகளில் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும்:-

(1) ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றரென்பதைச் செயலாளர் நாயகம் தனித்தனியே கேட்டு அத்தகைய வாக்குகளைப் பதிவு செய்வதன் மூலம் வாக்கெடுத்தல் வேண்டும். முதலாவது பிதம அமைச்ச ரையும் பின்னர் அமைச்சரவையின் அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோரை அவர்களது பெயர்களின் அகர வரிசைப்படியும் அதன் பின்னர் ஏனைய உறுப்பினர்களை அவர்களது பெயர்களின் அகர வரிசைப்படியும் வாக்களிக்கும்படி செயலாளர் நாயகம் கேட்பார். ஓர் உறுப்பினர் தாம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை எனக் கூறலாம். அத்தகைய விடயத்தில் செயலாளர் நாயகம் அவரது பெயரை அவ்வாறே பதிவுசெய்தல் வேண்டும்.

(2) செயலாளர் நாயகம் வாக்குகளின் எண்ணிக்கையை அறிவிப்பார். அவ்வாக்குகள் சம அளவானவையாயிருப்பின் சாபநாகர் தமது தீர்வு வாக்கை அளிப்பார். வாக்கெடுப்பின் முடிபை அதன்பின்னர் சபாநாயகர் பிரகடனஞ் செய்வார்.

43. தமது அபிப்பிராயத்தில் ஒரு வாக்கெடுப்பு அனாவசியமாகக் கோரப்படுகின்ற தெனச் சபாநாயகர் கருதினால், வாக்கழைப்பு மணி அடித்து முடிந்ததும் தமது தீர்மானத்தை ஆதரிப்பவர்களையும் ஏற்க மறுப்பவர்களையும் முறையே தத்தம் இடங்களில் எழுந்து நிற்கு ம்படி அழைத்து வாக்கெடுத்துத் தாம் உகந்ததெனக் கருதும்வகையில் ஒன்றில் வாக்குகளை எண்ணியதன்பின் பாராளுமன்றத்தின் முடிபைப் பிரகடனஞ்செய்வார். அல்லது உறுப்பின ரின் பெயர்களை அழைத்து வாக்கெடுக்கும்படி செயலாளர் நாயகத்தைப் பணிப்பார்.

44. ஓர் உறுப்பினர் தாம் தவறாக வாக்களித்துவிட்டாகவோ தம்முடைய வாக்குப் பிழையாக எண்ணப்பட்டு விட்டாதகவோ கூறினால், தம்முடைய வாக்கைத் திருத்திக்கொ ள்ள அவர் உரிமை கோரலாம். ஆனால் வாக்குகளின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டவுட னும் சபாநாயகர் வாக்கெடுப்பின் முடிபைப் பிரகடனம் செய்ய முன்னரும் அவ்வாறு கோர வேண்டும்.

## சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை

45. அரசியலமைப்பின் 78ஆம் உறுப்புரையின் ஏற்பாடுளுக்கமைய, முன்னறிவித் தலின் பின்னர் அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர், சமர்ப்பிப்பதற் காய பாராளுமன்றத்தின் கடளையின்றியே ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்கலாம். இவ்வாறு ஒரு சட்டமூலத்தைப் பொது அலுவல் ஆரம்பத்தில் சமர்பிக்கும்பொழுது செயலாளர் நாயகம் சட்டமூலத்தின் சட்டப்பெயரை வாசிப்பார். இது அந்தச் சட்டமூலத்தின் முதல் மதிப்பீடெனவும் அதை அச்சிடும்படி கட்டளையிடப்பட்டதாகவும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு தேதியில் அது இரண்டாம் மதிப்பீட்டை எதிர்நோக்கி நிற்றல் வேண்டும்.

எனினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில், குறிப்பிடப்பட்டுள்ள அவசரச் சட்டமூலமொன்றின் விடயத்தில் அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் நியமிக்கும் ஒரு நாளில் அச்சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டை எதிர்நோக்கி நிற்றல் வேண்டும்.

**அவசரச் சட்டமூலங்கள்**

46. ஒரு சட்டமூலம் தொடர்பாக சனாதிபதி பிரதம நீதியரசரருக்குச் செய்த ஆற்றுப்படுத்தலின் பிரதி ஒன்று சபாநாயகருக்குக் கிடைக்கும்போது அரசியலமைப்பின் 122 (1) ஆம் உறுப்புரையின் கீழ் தேசிய நலனைக்கருதி அவசரமானது என அமைச்சரவை கருதுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 122(1) (இ) உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறான அறிவுரை உயர் நீதிமன்றத்திடமிருந்து சபாநாயகருக்குக் கிடைக்கும்வரை ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுதல் ஆகாது.

**ஒருங்கியை நிரலிலுள்ள விடயங்கள் சம்பந்தான சட்டமூலங்களும் உத்தேச நியதிச்சட்டங்களும்**

*[46. அ (1) அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் 3ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சம்பந்தமான ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்பொழுது, பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, இந்தக் கட்டளையின் 2ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) சபாநாயகர், சொல்லப்பட்ட சட்டமூலத்தின் பிரதிகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் அல்லது பாராளுமன்றம் குறித்துரைக்கக் கூடிய அத்தகைய காலப்பகுதிக்குள், அச் சட்டமூலம்பற்றிய அதன் கருத்துக்களை அம்மாகாணசபை பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்வதற்கென அச்சட்டமூலத்தின் பிரதிகளை அம்மாகாண சபைக்கு அனுப்புமாறு செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்.

(ஆ) மேற்காட்டிய (அ) இல் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவடைவதன்மேல் அல்லது மாகாணசபையின் கருத்துக்கள் கிடைக்கப்பெறுவதன்மேல், இவற்றுள் எது முந்தியதோ அப்பொழுது, பாராளுமன்றம் அச்சட்டமூலம் சம்பந்தமாக நடவடிக்கையெடுக்க முற்படலாம்.

(3) (அ) ஒரு மாகாணசபை, அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் 3ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் உத்தேச நியதிச் சட்டம் பற்றிப் பாராளுமன்றத்தின் ஆலோசனையைப்பெற விழைவதாக எப்பொழுதாயினும் அச்சபையிடமிருந்து செய்தி கிடைக்கும்பொழுது சபாநாயகர், கிடைக்கக்கூடிய முதல் சந்தர்ப்பத்திலேயே, அந்தச் செய்தி கிடைத்தமை பற்றி அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதும் அச்செய்தி ஒரு நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம், ஆக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்தபின்னர், உத்தேச நியதிச்சட்டம்பற்றிய பாராளுமன்றத்தின் கருத்துக்களைச் சம்பந்தப்பட்ட மாகாணசபையின் செய்தி கிடைத்த ஒரு மாத காலத்துள் அனுப்புமாறு செயலாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்குதல் வேண்டும்.]

---

• 1989, டிசம்பர் 29 ஆந் தேதிய இருபத்தாறாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

### தனியார் உறுப்பினரின் சட்டமூலங்கள்

47. (1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுவதுடன் அவ்வாறு விண்ணப்பிக்கும் அவ்வுறுப்பினர் அதேசமயத்தில் உத்தேசச் சட்டமூலத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் சிங்களத்திலும், தமிழிலும் பிரதியொன்றை அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) அச்சட்டமூலம் சிங்களத்திலும், தமிழிலும் அதன் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலும் கசெற்றில் வெளியிடப்படுவதற்குச் செயலாளர் நாயகம் வகைசெய்தல் வேண்டும்.

(4) சட்டமூலம் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியில் இருந்து ஏழு நாட்கள் கழிந்ததன் பின்னர் ஏதேனுமொரு தினத்தில் இக்கட்டளையின் (2) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(5) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டதும், சட்டமூலம் முதல் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது, சட்டமூலம் விளக்கும் விடயங்கள் கருமங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ, அத்தகைய அமைச்சரவையின் அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ இல்லாதவிடத்து சபாநாயகர் நியமிக்கும் அமைச்சரவையின் வேறொரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்துவதுடன், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரவையின் அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலத்தின் மீது மேல்நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(6) இக்கட்டளையின் முற்போந்த பந்தியில் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின் அல்லது அமைச்சரவையின் அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்கு சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பின் சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் அமைச்சரால் அல்லது பிரதி அமைச்சரால் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படாவிடின், அச்சட்டமூலத்துக்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் ஒரு தேதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்கு அச்சட்டமூலம் ஒதுக்கப்படல் வேண்டும்.

48. (1) குறிப்பிட்ட ஓர் ஆளை, சங்கத்தை அல்லது கூட்டு நிறுவனத்தைப் பாதிக்கும் அல்லது நலன் விளைவிக்கும் நோக்குடன் ஒரு சட்டமூலம் பிரேரிக்கப்படுமிடத்து கசெற்றில் சிங்கத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் இலங்கைக் குடியரசில் விற்பனையிலுள்ள குறைந்தது ஒரு சிங்கள , ஒரு தமிழ், ஒரு ஆங்கிலச் செய்தித் தாள்களிலுமாவது அச்சட்டமூலத்தின் பொது இயல்புகளையும் நோக்கங்களையும் கொண்ட ஓர் அறிக்கையை விளம்பரப்படுத்துவதன் வாயிலாக முன்னறிவித்தல் கொடுபடல் வேண்டும்; அத்தகைய விளம்பரம், சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிகோரும் விண்ணப்பம் செய்யப்படுவதற்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(2) “அத்துடன் நிலையியற் கட்டளை 48 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களின் ஒரு பிரதியையும் கொடுக்க வேண்டும்” என்னும் சொற்களை நிலையியற் கட்டளை 47 இன் (2) ஆம் பந்தியின் ஈற்றில் சேர்த்துக்கொண்டால் அப்பந்தி இத்தகைய சட்டமூலம் ஒவ்வொறுக்கும் பொருந்தும்.

(3) இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு சட்டமூலமும் சபாநாயகரால் ஒரு நிலையியற் குழுவிற்கோ, அமைச்சரவையின் ஓர் அமைச்சரால் அல்லது பிரதி அமைச்சரால் பிரேரிக்கப்படும் பிரேரணையை பாராளுமன்றம் அங்கீகரிக்கும் பட்சத்தில் சாபாநாயகரால் நியமிக்கப்படும் ஒரு தெரிகுழுவிற்கோ ஆற்றுப்படுத்தப்படும்.

(4) சட்டமூலம் நிறைவேற்றப்படுவது உகந்ததே என்பதைக் காட்டும் வண்ணம் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைப் பொருள்களையும் பிற குற்றச்சாட்டுக்களையும் நிரூபிக்குமாறு குழு கோருவதுடன், அது தேவையெனக் கருதும் வாய்மூல அல்லது பிற சான்றுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அதையடுத்துக் குறிப்பிட்ட உண்மைப் பொருள்களும் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லையென்று குழு காணுமிடத்து அங்ஙனமே அது அறிக்கை சமர்ப்பிக்கும்; ஆனால் குறிப்பிட்ட உண்மைப் பொருள்களும் குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டனவென்று குழு காணுமிடத்து அது சட்டமூலத்தின் பல்வேறு வாசகங்களையும் பரிசீலனை செய்ய வேண்டும். அது வாசகங்களை நீக்கலாம்; புது வாசகங்களைச் சேர்க்கலாம். அத்துடன் தான் தேவையெனக் கருதும் வேறு திருத்தங்கள் எவற்றையும் செய்யலாம். அத்தகைய புது வாசகங்கள், ஏனைய திருத்தங்கள் அனைத்தும் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியில் கோரப்படும் முன்னறிவித்தலில் குறிக்கப்படும் இயல்புகளுக்கும், நோக்கங்களுக்கும் புறம்பாக எந்தவொரு வாசகத்துக்கும் இத்தகைய சட்டமூலத்தில் இடமளிக்கலாகாது. ஒரு வாசகம் நியாயமாதும் உகந்ததுமேயென எடுத்துக்காட்டும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சட்டமூலத்தில் குறிப்பிட்டாலன்றி இத்தகைய சட்டமூலத்தில் தனியார் உரிமையையோ நலனையோ பாதிக்கும் எந்தவொரு வாசகமும் அனுமதிக்கப்படலாகாது.

### பாதிக்கப்பட்ட கட்சிக்காரர், சாட்சிகள், சாட்சியம்

49. (1) தனிப்பட்டவர்களின் உரிமைகளோ, நலன்களோ எந்தவொரு சட்டமூலத்திலும் தனித்தன்மையதாய் பாதிக்கப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும், அவ்வண்ணம் பாதிக்கப்படும் கட்சிக்காரர் அனைவரும் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட குழுவுக்கு மனுச்செய்து தெரிவிக்கும் குறைகள் நேர்முகமாகவோ சட்ட ஆலோசகர் மூலமாகவோ அக்குழுவினால் செவிமடுக்கப்படலாம்.

(2) சாட்சிகள் எவரையாவது விசாரணை செய்யக் கருதினால் அந்தச் சாட்சிகள் தேவையெனக் கோரும் மனுதாரரோ, பாராளுமன்ற உறுப்பினரோ விசாரணைக்கென நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னர் அச்சாட்சிகளின் பெயர்கள், வசிப்பிடம், தொழில் ஆகியவற்றைக் கொண்டவொரு பட்டியலைச் செயலாளர் நாயகத்திடம் கொடுத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சாட்சியின் சாட்சியத்தையும் எழுத்திற் பதிந்து அதை அச்சாட்சிக்கு வாசித்துக்காட்டல் வேண்டும். அவர் அப்பொழுது விரும்பினால் அதில் எந்தத் திருத்தத் தையும் செய்யலாம். திருத்தமெதுவும் செய்யப்படாதவிடத்து பதியப்பெற்ற சாட்சியம் அப்ப டியே நிலைபெறும்; இதன்பின்னர் அதனை மாற்றவியலாது.

### இரண்டாம் மதிப்பீடு

50. (1) அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழ் உள்ள ஒரு சட்டமூலம் தவிர்ந்த சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு தேதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்கு ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஏற்பாடோ அரசியலமைப்புடன் ஒத்துப்போகாததா என்பதைத் தீர்மானிக்க அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கோரப்பட்டு ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதி ஒன்று சபாநாயகரிடம் வழங்கப்படுமிடத்து -

(அ) அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு ஒன்றின் தாக்கல், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய் யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாட்கூட்டத் தின்போது சபாநாயகரால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யபட்ட தேதியலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை இவற்றுள் எது முதலில் நிகழுகின்றதோ அதுவரை அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்நடவ டிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன் றத்தின் முதலாவது நாட் கூட்டத்தின் போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலின் மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படலாகாது.

### இரண்டாம் மதிப்பீட்டில் விவாதம்

51. சட்டமூலம் ஒன்றின் இரண்டாம் மதிப்பீட்டின் பொழுது சட்டமூலத்தின் பொதுத் தகைமைகளையும் கொள்கைகளையும் உள்ளடக்கிய விவாதம் ஒன்று எழலாம்.

### சட்டமூலம் மீதான குழு

52. அமைச்சரவையின் ஒரு அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் பிரேரணையின்மீது சட்டமூலம் ஒன்று இரண்டாம் மதிப்பீடு பெற்றதும், முழுப் பாராளுமன்றக் குழுவிற்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

எனினும், வருடாந்த அல்லது குறைநிரப்பும் ஒதுக்கீட்டுச் சட்டமூலங்கள் தவிர்ந்த ஒரு சட்டமூலம் சபாநாயகரால் நியமிக்கப்படும் ஒரு தெரிகுழுவிற்கோ அல்லது ஒரு நிலையியற் குழுவிற்கோ ஆற்றுப்படுத்தப்படவேண்டுமென்று அமைச்சரவையின் ஒரு அமைச்சரோ அல்லது ஒரு பிரதி அமைச்சரோ பிரேரிக்கும் ஒரு பிரேரணையைப் பாராளுமன்றம் ஏற்குமாயின் அச்சட்ட மூலம் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்படலாம்.

53. ஒரு நிலையியற் குழுவிற்கோ ஒரு தெரிகுழுவிற்கோ ஒரு சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்டால் அக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்வரை அச்சட்டமூலத்தின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படலாகாது.

### குழுநிலையில் சட்டமூலங்கள் மீதான நடைமுறை

54. சட்டமூலம் ஒன்றைப் பலிசீலிகுமாறு குழுவொன்றிடம் அது கையளிக்கப்பட்டால், அக்குழு அச்சட்டத்தின் பல்வேறு ஏற்பாடுகளையும் பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் எதுவேனும் இருந்தால் அவற்றையும் ஆராயும்; அக்குழு தனது கூட்ட அமர்வுகளை ஒத்திவைக்கலாம்; முழுப் பாராளுமன்றக் குழுவாயின் பரிசீலனையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காலத்திற்குக்காலம் சந்தர்ப்பம் எழும்போது அறிவிக்கலாம்.

55. ஒவ்வொரு வாசகத்திற்குமுரிய இலக்கத்தை குழுக்களின் தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் ஒன்றின்பின் ஒன்றாக வாசித்தல் வேண்டும்.

56. சட்டமூலத்திலடங்கிய பொருளுக்குப் பொருத்தமானதாகவும் அல்லது வேறு வகைகளில் நிலையியற் கட்டளைகளுக்கிசைந்ததாகவும் சட்டமூலத்தின் ஒரு வாசகத்தில் திருத்தங்கள் எதுவும் செய்யலாம் அல்லது வாசகங்களை நீக்கலாம் அல்லது புது வாசகங் களை சேர்க்கலாம்.

57. சட்டமூலத்தின் அடிப்படைக் கொள்கை குழுநிலையில் ஆராயப்படல் ஆகாது; விபரங்கள் மட்டுமே ஆராயப்படலாம்.

58. ஒரு சட்டமூலத்தின் முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிபுக்கு முரணான எந்தவொரு திருத்தமும் பிற்பகுதியில் பிரேரிக்கமுடியாது.

59. ஒரு சட்டமூலம் குழுநிலையில் மதிப்பிடப்பெற்று முடிந்ததும் அச்சட்டமூலம் தொடர்ந்து குழுநிலையிலுள்ளபோது தவிசாளரின் அனுமதியுடன் எந்தவொரு உறுப்பி னரும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த ஒரு வாசகத்திற்கும் திருத்தம் பிரேரிக்கலாம்.

60. (1) ஒரு வாசகத்தின் திருத்தமொன்றில் அக்கிராசனம் பிரேரணையை முழுமையாகச் சமர்ப்பிக்காதவிடத்து அவ்வாசகம் பின்போடப்படலாம்.

(2) சட்டமூலத்தின் எஞ்சிய வாசகங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரும் புது வாசகங் கள் சமர்ப்பிக்கப்படுமுன்னரும் பின்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

61. (1) சட்டமூலத்தின் அட்டவணைகளைப் பரிசீலிக்குமுன் அச்சட்டமூலத்துக்குப் புது வாசகங்கள் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் புது வாசகங்கள் முதல் மதிப்பீடு பெற்றவையாகக் கருதப்படல் வேண்டும். அதையடுத்து முறையே “அந்த வாசகம் இரண்டாம் மதிப்பீடு பெறுக” என்றும் “அந்த வாசகம் (அல்லது திருத்தப்பட்டவாறான வாசகம்) சட்டமூலத்துடன் சேர்க்கப்படுவதாக” என்றும் பிரேரணைகள் பிரேரிக்கப்படல் வேண்டும்.

(2) சட்டமூலத்திற்குரிய அட்டவணைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தும் புது அட்டவைணைகள் சமர்ப்பிக்கப்படலாம். அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் அட்ட வணைகள் புது வாசகம் எவ்வாறு பரிசீலிக்கப்படுமோ அவ்வாறு பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வாசகமும் அட்டவணையும் பிரேரிக்கப்பட்ட புது வாசகமோ அல்லது அட்டவணையோ பரிசீலிக்கப்பட்டதும் சட்டமூலத்திற்குப் பாயிரம் ஒன்று இருப்பின் அப்பாயிரம் பரிசீலிக்கப்பட்டு "இது சட்டமூலத்தின் பாயிரமாக இருக்குமாக" என்ற பிரேரணை பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

(4) சட்டமூலத்தின் சட்டப்பெயருக்கு ஏதாவது திருத்தம் தேவைப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் ஈற்றில் அத்திருத்தம் பிரேரிக்கப்படல் வேண்டும்.

**சட்டமூலங்கள் மீதான குழுக்களின் அறிக்கைககள்**

62. முழுப் பாராளுமன்றக் குழுவொன்று ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனைசெய்து முடித்ததும் திருத்தப்பட்டவாறான அல்லது திருத்தங்களற்ற அச்சட்டமூலத்தை தவிசாளர் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

63. ஒரு சட்டமூலம் பரிசீலனைக்கென ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு நிலையியற் குழுவோ அல்லது ஒரு தெரிகுழுவோ தனது விதப்புரைகளுடன் பாராளுமன்றத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வறிக்கையின் பிரதியொன்று ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

64. ஒரு சட்டமூலத்தின் தெரிகுழுவின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வறிக்கை சபாபீடத்தில் இடப்படுவதாக எனக் கட்டளையிடலாம்; அன்றேல் பாராளுமன்றம் வழிப்படுத்தும் வேறெவ்வகையிலும் கையாளப்படலாம். எந்தவோர் உறுப்பினரும் பிரேரிக்கும் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் சட்டமூலத்தை முழுப் பாராளுமன்றக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்தலாம்; அல்லது தெரிகுழுவின் அறிக்கையை அச்சட்டமூலத்துக்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒரு நாளில் பரிசீலனை செய்வதற்கென ஒதுக்கலாம்.

65. ஒரு சட்டமூலத்தின் நிலையியற் குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டும். அச்சட்டமூலத்துக்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒரு நாளில் அவ்வறிக்கை பரிசீலனை செய்வதெற்கென ஒதுக்கப்படல் வேண்டும். ஒரு நிலையியற் குழுவின் அல்லது தெரிகுழுவின் அறிக்கை பலிசீலனை செய்யப்படுமிடத்து குழுவால் அச்சட்டமூலத்தில் திருத்தங்கள் எதுவும் செய்யப்பட்டிருப்பின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பலிசீலிக்கும்; ஆனால் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். குழுவால் செய்யப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக பின் தொடர்கின்ற திருத்தங்களைத் தவிர அறிக்கையைப் பரிசீலனை செய்கையில் பாராளுமன்றத்தால் புதிய திருத்தங்கள் எதையும் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட குறிப்பிட்ட சில திருத்தங்களைப் பற்றிய குறிப்புடன் சட்டமூலம் அதே குழுவிற்கு மறுபரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்படலாம்.

**மூன்றாம் மதிப்பீடு**

66. முழுப் பாராளுமன்றக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒரு தெரிகுழுவால் திருத்தமின்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஒரு சட்டமூலம் ஒரு பிரேரணையின் அடிப்படையில் உடனே மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப்பீட்டைப் பின்போடவேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பின்போடலாம்.

67. (1) ஒரு நிலையியற் குழுவால் திருத்தமின்றிப் பாராளுமன்றத்திற்கு ஒரு சட்ட மூலம் அறிக்கையிடப்படுமிடத்து அவ்வறிக்கையின் பலிசீலனைக்கென நியமிக்கப்படும் நாளிலேயே மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப் பீட்டைப் பின் போடவேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பின்போடப்படலாம்.

(2) ஒரு சட்டமூலத்தில் ஒரு நிலையியற் குழுவோ ஒரு தெரிகுழுவோ திருத்தங்கள் செய்திருந்தால் குழுசெய்த திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனைசெய்து முடித்தவு டன் மூன்றாம் மதிப்பீடு பெற்று நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப்பீட்டைப் பின்போடவேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் அவ்வாறு பின்போடப்படலாம்.

**68. [ஒரு சட்டமூலத்தின் மூன்றாம் மதிப்பீட்டின்பொழுது, முன்னறிவித்தலில் பின் கொணரப்படும் பிரேரணையின் அடிப்படையில் வார்த்தைகளில் அல்லது வாசக உருவில் திருத்தங்கள் செய்யலாம். சபாநாயகரின் சான்றுரை சட்டமூலத்தில் குறிக்கப்படு முன் எந்நேரத்திலும், சட்டமூலத்திலிருக்கத்தக்க இலக்கணப் பிழை அல்லது தட்டெழுத்துப் பிழை எதனையும் திருத்துவதற்குச் சபாநாயகருக்குத் தத்துவமுண்டு.]

### சபாநாயகரது சான்றுரை

69. சட்டமூலமொன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டதும் அதிகூடிய விரைவில் அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையில் விதிக்கப்பட்டுள்ள சான்றுரையை சபாநாயகர் அச்சட்டமூலத்தில் சிங்களத்திலும் தமிழிலும் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

### ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கென ஒதுக்கப்பட்ட நாட்கள்

*70. [(1) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பரிசீலிப்பதற்கென திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக (இதற்கு முன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டாலன்றி) இருபத்தாறு நாட்களுக்கு மேற்படாமல் ஒதுக்கப்படல் வேண்டும்.

எனினும், ஏதாவது குறைநிரப்பும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்காக எடுக்கப்பட்ட நாட்கள் மேற்குறிப்பிட்ட இருபத்தாறு நாட்களைத் தொகுப்பதில் சேர்த்துக் கொள்ளப்படலாகாது.

(2) அங்ஙனம் ஒதுக்கப்பட்ட ஒரு நாளில் அமர்வு நேரம் முற்பகல் 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரையும், பிற்பகல் 1.30 மணிமுதல் பிற்பகல் 6.30 மணிவரையுமென இருத்தல் வேண்டும்.

எனினும், பிற்பகல் 6.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5)ஆம், (6) ஆம் பந்திகள் செயற்படல் வேண்டும்.

(3) அங்ஙனம் ஒதுக்கப்பட்ட ஒரு நாளில் பொது அலுவல்களின் முதலாவது விடயமாக ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இடம்பெறவேண்டியதுடன் அத்தகைய ஒரு நாளில் பிற்பகல் 6.00 மணிக்கு முன்பு வேறெந்தப் பொது அலுவலும் எடுக்கப்படலாகாது.

(4) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டிற்கு ஏழு நாட்களுக்கு மேல் ஒதுக்கப்படலாகாது. இரண்டாம் மதிப்பீட்டின் மீதான நடவடிக்கைகள் ஏற்கெனவே முடிவுற்றிருந்தாலன்றி ஒதுக்கப்பட்ட ஏழாம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குச் சபாநாயகர் அதனை நிறைவேற்றத் தேவையான எப்பிரேரணையையும் உடனடியாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய பிரேரரணைகள் யாவும் நிறைவேற்றப்படும்வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படலாகாது.

---

* 1985, சனவரி 8 ஆந் தேதிய பதிநான்காம் திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

** 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய இருபத்தொன்பதாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(5) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆய்வுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களுள் இருபத்திரண்டு நாட்களுக்கு மேல் ஒதுக்கப்படலாகாது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று பிற்பகல் 6.00 மணிக்கு சட்டமூலம் ஏற்கெனவே அறிக்கையிடப்பட்டிருந்தாலன்றி அப்போது விவாதத்திலிருக்கும் எவையேனும் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அதனைத் தொடர்ந்து அத்தலைப்புக்கான அரசாங்கத் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அத்தலைப்பை நிறைவேற்றத் தேவையான பிரேரணைகளையும் தவிசாளர் உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு அமைச்சின் தலைப்புக்கள் தொடர்பாகவும் அவ்வமைச்சின் மதிப்பீடுகளின் எஞ்சியுள்ள தலைப்புகளின் மொத்தத் தொகைகள் அம்மதிப்பீடுகளில் வரையறுக்கப்பட்டுள்ள சேவைக்கென அட்டவணையில் சேர்க்கப்படுவதாக எனவும், பின்னர் பல்வேறு அட்டவணைகளும் முறையே சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனவும் பிரேரணையை உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும். அச்சட்டமூலம் அறிக்கையிடப்படும்வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படலாகாது.

(6) இக்கட்டளையின் கீழ் இடம்பெறும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரும் எந்நாளன்றும் அந்நடவடிக்கைகளின் பரிசீலனை ஒத்திவைப்புப் பிரேரணை மூலம் எதிர்நோக்கப்படவோ இடைநிறுத்தப்படவோ ஆகாது. மேலும் இந்நடவடிக்கைகளின்மீது தடங்கற் பிரேரணைகள் எவையும் கொண்டுவரப்படலாகாது.

எனினும், 17ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ஒத்திவைப்புப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பின் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான நடவடிக்கைகள் முடிவுறும்வரை அப்பிரேரணை நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றம் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்தாலன்றி பிற்பகல் 8.30 மணிக்கு, சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.]

## ஒழுங்குவிதிப் பொறுப்பு

71. (1) பாராளுமன்றத்தில் சபாநாயகரும் குழுக்களில் அவ்வவற்றின் தவிசாளரும் முறையே பாராளுமன்றத்திலும் அவ்வக்குழுவிலும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதற்குப் பொறுப்புடையோராவர். எந்தவிதமான ஒழுங்குப்பிரச்சினைமீதும் இவர்களின் முடிபை எதிர்த்து மனுப்பண்ண முடியாது; முன்னறிவித்தலின்பின் செய்யப்படும் ஒரு தன்னிலைப் பிரேரணைமீதல்லாமல் பாராளுமன்றத்தால் இதனைப் புனராலோசனை பண்ணவும் முடியாது.

(2) ஒரு விவாதத்தின்போது சபாநாயகரோ தவிசாளரோ தமது இருக்கையினின்றும் எழுந்தால் உரையாற்றிக்கொண்டிக்கும் அல்லது உரையாற்றவிருக்கும் உறுப்பினரெவரும் தமது இருக்கையிலமர வேண்டும். சபாநாயகர் அல்லது தவிசாளர் கூறுவதை எவ்விதக் குறுக்கீடுமின்றிச் செவிமடுக்கக்கூடியதாகப் பாராளுமன்றமோ குழுவோ அமைதியாக இருத்தல் வேண்டும்.

(3) ஒழுங்குப் பிரச்சினையொன்றை எடுத்துரைத்தபின் அதனை எடுத்துரைத்த உறுப்பினர் தமது இருக்கையில் அமர்தல் வேண்டும். சபாநாயகரோ தவிசாளரோ எழுந்து ஒழுங்குப் பிரச்சினையில் தமது தீர்ப்பினைக் கூறும்வரை சபாநாயகரின் அல்லது தவிசாளரின் அனுமதியின்றி வேறெந்த உறுப்பினரும் எழுந்து நிற்றலாகாது. தீர்ப்பளிக்கப்பட்டபின் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்ட சமயம் பாரளுமன்றத்தில் உரையாற்றி நின்ற உறுப்பினர் தலைமை தாங்குபவரின் தீர்ப்பை அனுசரித்து தமது உரையைத் தொடர்ந்து நிகழ்த்த அருகதையுடையவர்.

### பாராளுமன்றத்தில் ஒழுங்கு

72. (1) ஓர் உறுப்பினர் வேண்டுமென்றும் விடாப்பிடியாகவும் பாராளுமன்றத்தின் அலுவலை தடைப்படுத்துவதன் மூலமோ வேறெவ்வகையிலோ பாராளுமன்றத்தின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்வதும் அக்கிராசனத்தின் அதிகாரத்தை அவமதிப்பது மான குற்றமிழைத்தலை உடனடுத்து சபாநாயகர் அவ்வுறுப்பினரைப் பெயர் குறிப்பிட்டால் "குறித்த அவ்வுறுப்பினர் பாராளுமன்றத்தின் சேவையினின்றும் இடைநிறுத்தி வைக்கப்படல் வேண்டும்" என்ற பிரேரணையை உடனடியாக சபாநாயகர் சபைக்குவிட வேண்டும். இப்பிரேரணையில் விவாதமோ ஒத்திவைப்போ திருத்தமோ அனுமதிக்கப்பட மாட்டாது.

(2) இக்கட்டளையின் கீழ் அத்தகைய ஒரு பிரேரணை நிறைவேற்றி ஓர் உறுப்பினர் இடைநிறுத்தி வைக்கப்படுமிடத்து இந்த இடைநிறுத்தம் முதலாவது சந்தர்ப்பத்தில் ஒரு வாரமாகவும் அதே கூட்டத்தொடரில் இரண்டாவது சந்தர்ப்பத்தில் இரு வாரங்களாகவும் மூன்றாவது அல்லது அதன் பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு மாதமாகவும் அமைதல் வேண்டும்.

(3) ஒன்றாகச் சமுகமாயிருக்கும் பல உறுப்பினர்கள் ஒருமித்து அக்கிராசனத்தின் அதிகாரத்தை அவமதித்தலான்றி ஒரேநேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர் குறிப்பிடப்படலாகாது.

(4) இக்கட்டளையின் கீழ் பாராளுமன்றத்தின் சேவையினின்றும் இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லது ஒருமித்து இயங்கும் பல உறுப்பினர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலவரையறையுள் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சபாநாயகரின் கட்டளைக்கு எந்நேரத்திலாவது கீழ்ப்படிய மறுத்தால், தனது கட்டளையைச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சபாநாயகர் பணிக்கலாம்.

(5) இக்கடளையின் முதலாம் பந்தியில் விபரிக்கப்பட்டது போன்ற ஒரு குற்றம் முழுப் பாராளுமன்றக் குழுவில் இழைக்கப்பட்டால் தவிசாளர் உடனடியாகக் குழுவின் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்து, அவ்வாறு நிறுத்திவைப்பதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்; இந்த அறிவித்தலின் பேரில் பிரேரிக்கப்பட்டும் ஒரு பிரேரணை பாராளுமன்றத்திலேயே குற்றம் இழைக்கப்பட்டதாகக் கொண்டு திருத்தம், ஒத்திவைப்பு அல்லது விவாதம் எதுவுமின்றி சபாநாயகரால் சபைக்கு விடப்படவேண்டும்.

73. ஒரு விவாதத்தில் ஏனைய உறுப்பினர் காட்டிய நியாயங்களை அல்லது தனது சொந்த நியாயங்களைத்தானும் சலிப்பூட்டும் முறையில் மீட்டுரைப்பதிலோ அல்லது விவாதப் பொருளுக்குப் பொருத்தமற்ற வகையில் உரையாற்றுவதிலோ ஓர் உறுப்பினர் விடாப்பிடியாயிருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரின் நடத்தையைப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர் அவ்வுறுப்பினர் உரையாற்றுவதை நிறுத்துமாறு பணிக்கலாம்.

74. (1) பாராளுமன்றக் கூட்டத்தில் படுமோசமாக ஒழுங்கற்ற முறையில் ஒழுகும் உறுப்பினர்கள் அன்றைய எஞ்சிய நேரக் கூட்ட அமர்விலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமெனச் சபாநாயகர் கட்டளையிட வேண்டும். தனது கட்டளையைச் செயற்படுத்த உகந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகர் பணிக்கலாம்.

(2) எந்தச் சந்தர்ப்பத்திலாவது இக்கட்டளையின் கீழ் தமக்குள்ள அதிகாரங்கள் போதாதெனச் சபாநாயகர் கருதினால் 72 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் அவர் அவ்வுறுப்பினரை அல்லது அவ்வுறப்பினர்களைப் பெயர் குறிப்பிடலாம்.

** [75. 72 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் இடைநிறுத்தி வைக்கப்படும் அல்லது 74 ஆம் கட்டளையின் கீழ் வெளியேறுமாறு பணிக்கப்படும் உறுப்பினர்கள், பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்பதுடன் அவ்வாறு இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட காலப்பகுதியில் அவர்கள் குழுக்களிலிருந்தும் தடைசெய்யப்பட்டிருப்பர்.

பாராளுமன்ற வளவெல்லை என்பது பாராளுமன்றக் கட்டடங்களையும் அவையுட்பட பாராளுமன்றத்தின் 1 ஆம் இலக்க வாயிலிருந்து 3 ஆம் இலக்க வாயில் வரையுள்ள நிலப்பரப்பையும் உள்ளடக்கிய பகுதியாகும்.]

76. பாராளுமன்றத்தில் கடும் குழப்பநிலை ஏற்படுமிடத்து சபாநாயகர் அவசிய மெனக் கருதினால் வினா விடுக்காமலேயே பாராளுமன்றத்தை ஒத்திவைக்கலாம் அல்லது தாம் குறிப்பிடும் நேரம் வரை பாராளுமன்றக் கூட்டத்தை இடைநிறுத்தி வைக்கலாம்.

*77. [(1) எவரேனும் உறுப்பினர், விவாதத்தின்போது, ஒழுங்கற்ற அல்லது மாமன் றப் பண்பிற்கு ஒவ்வாதனவான தகாத வார்த்தைகளை உபயோகித்திருந்து அல்லது விவா தத்தின்போது, 78 ஆம் நிலையியற் கட்டளையையோ அல்லது 84 (vi) அல்லது (viii) ஆம் இலக்க நிலையியற் கட்டளையையோ மீறி ஏதேனும் குறிப்பிட்டிருந்து அவ்வாறு உபயோ கித்தற்கு அவ்வுறுப்பினர் பாராளுமன்றம் திருப்தியுறும் வகையில் விளக்கம் தராமலும் அல்லது தவறென அதை விக்கிக்கொள்ளாமலும் அல்லது மன்னிப்புக் கோராமலும் இருந்தாரெனில் அல்லது இக்கட்டளைகளில் குறித்துரைக்கப்படாத கட்டளையை மீறியுள் ளாரெனில் பாராளுமன்றம் தகுந்ததெனக் கருதும் முறையில் அவுறுப்பினருக்கெதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்பதோடு இக்கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்ட விதத்திலல் லாது வேறெந்தவிதத்திலும், இக்கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டளையை மீறுகின்றமைக்காக எவரேனும் உறுப்பினருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதிலிருந்து பாராளுமன்றத்தை, இக்கட்டளைகளில் எதுவும், இடையிட்டு நிறுத்த முடியாது.

(2) (i) (அ) ஒழுங்கற்ற அல்லது மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாதனவான தகாத வார்த்தைகள் விவதத்தின்போது உபயோகிக்கப்பட்டிருப்பதாக, அல்லது

(ஆ) விவாதத்தின்போது, 78 ஆம் இலக்க நிலையியற் கட்டளையை அல்லது 84 (vi) அல்லது (viii) ஆம் இலக்க நிலையியற் கட்டளை யை மீறி ஏதேனும் குறிப்பிடப்பட்டிருப்பதாக

சபாநாயகர் கருதினால், அவரது தற்றுணிபில், அவர் அச்சொற்களை அல்லது அக்கூற்றுக்களை பாராளுமன்ற விவாதங்களின் அதிகார அறிக்கையிலிருந்து (ஹன்சாட்) அகற்றுவதற்குக் கட்டளையிடலாம் என்பதோடு அவ்வார்த்தைகள் அல்லது கூற்றுக்கள் சொல்லப்படாத சொற்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ii) பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளின் போதல்லாது வேறு சந்தர்ப்பங்களில் சபாநாயகர் அவ்வாறு கட்டளையிட்டால், பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின் போது சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அவ்வாறு கட்டளையிட் டமை பற்றி அறிவித்தல் வேண்டும்.]

---

* 1980, மார்ச் 5 ஆந் தேதிய முதலாம் திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

** 1993, பெப்ரவரி 26ஆந் தேதிய முப்பதாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

### விவாத விதிகள்

78. தன்னிலைப் பிரேரணையொன்றின் மீதன்றிச் சனாதிபதி அல்லது பதில் சனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள் அல்லது நீதி நிருவாகப் பணியாற்றும் வேறு ஆட்கள் ஆகியோரின் நடத்தைபற்றிப் பாராளுமன்றத்தில் வினாவெழுப்புதல் ஆகாது. ஒரு திருத்தப் பிரேரணையிலே ஓர் உறுப்பினரிடம் கேட்கும் கேள்வியிலோ வேறு எந்த ஒரு விடயத்துடனும் தொடர்புடைய ஒரு பிரேரணையில் நிகழும் வாதக் குறிப்புரைகளிலோ மேற்கூறிய ஆட்களின் நடத்தைபற்றிக் குறிப்பிடுவது ஒழுங்கற்றதாகும்.

* [78அ. (1) நிலையியற் கட்டளைகளில் முரணாக எது எப்படியிருப்பினும், நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான பிரேரணை ஒன்றைச் சனாதிபதிக்குச் சமர்ப் பிப்பதற்கான தீர்மானம் ஒன்றுக்காய முன்னறிவித்தல், அரசியலமைப்பின் 107 ஆம் உறுப் புரைக்கு இணங்கச் சபாநாயகருக்குக் கொடுக்குமிடத்து, சபாநாயகர் அத்தகைய தீர்மானத் தை ஏற்றுக் கவனித்து அதனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறச் செய்தல் வேண்டும்; ஆயினும் இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட்ட திகதியிலிருந்து ஒரு மாதகாலம் முடிவதன் பின்னர் வரை அத்தகைய தீர்மானம் மீதான நடவடிக்கை தொடரப்படலாகாது.

(2) இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானம் ஒன்று பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெறுமிடத்து அத்தகைய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை பற்றிய குற்றச் சார்த்தல் களை நுண்ணாய்வு செய்து பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடும் பொருட்டு எழுவருக்குக் குயைறையாத உறுப்பினரைக் கொண்ட பாராளுமன்றத் தெரிகுழுவொன்றைச் சபாநாயகர் நியமித்தல் வேண்டும்.

(3) இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு எந்த நீதிபதியின்மீது சார்த்தப்பட்ட தவறான நடத்தை அல்லது திறனின்மை நுண்ணாய்வு க்குட்பட்டுள்ளதோ அந்த நீதிபதிக்கு, அத்தகையை நீதிபதிக்கு எதிராகச் செய்யப்பட்ட வையும், தெரிகுழு எந்தத் தீர்மானத்தைப் பற்றி நியமிக்கப்பட்டதோ அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவையுமான துர்நடத்தை அல்லது தகவின்மை தொடர்பான குற்றச்சார்த்தல் களின் பிரதி ஒன்றை அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், தெரிகுழு குறித்துரைக்கும் அத்தகைய காலப்பகுதிக்குள் ஒரு எழுத்துமூலமான எதிர்வாதக்கூற்றைச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்துதலும் வேண்டும்.

**[(4) இக்கட்டளையின் (2)ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் தெரிகுழு ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், தெரிகுழுவின் கூட்ட நடப்பெண் அதன் உறுப்பிப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்குக் குறையாததாக இருத்தலும் வேண்டும்.]

(5) இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் தெரிகுழு எந்த நீதிபதிமீது சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை விசாரணைக்குட்பட் டுள்ளதோ அந்த நீதிபதி அத்தெரிகுழு முன் நேரிலோ பிரதிநிதிமூலமோ தோன்றுவதற்கும் அக்குழு அவரது வாதத்திற்குச் செவிமடுப்பதற்கும் அத்துடன் தனக்கெதிராகச் சுமத்தப்ப ட்ட குற்றச்சார்த்தல்களைத் தகர்க்கும்பொருட்டு அவர் வாய்மூலமான அல்லது ஆவணமூல மான சான்றினை முன்வைப்பதற்கும், அந்நீதிபதி உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

---

* 1984, ஏப்பிரல் 4 ஆந் தேதிய ஐந்தாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

** 1985, சனவரி 8 ஆந் தேதிய பதினைந்தாவது திருத்தத்தால் மூல 78(4) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

(6) இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் தெரிகுழு தான் நடாத்தும் நுண்ணாய்வு முடிவுற்றதும் அதன் அமர்வுகள் ஆரம்பித்ததிலிருந்து ஒரு மாதத்துக்குள் தன்முன் பதியப்பட்ட சான்று பற்றிய குறிப்புக்களுடன் தனது முடிவெடுப்புக் களைப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடல் வேண்டும் என்பதுடன், அக்குழு, பாராளு மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவது தகும் எனத் தான் கருதும் எவையேனும் விடயங்கள் பற்றிய விசேட அறிக்கை ஒன்றையுஞ் செய்யலாம்:

ஆயின், எவ்வாறாயினும் இதன்கண் குறித்துக் கூறப்பட்ட கால எல்லைக்குள் தெரிகுழு தனது முடிவெடுப்புக்களைப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட முடியாதிருந் தால் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு, அக்குழு குறிப்பிட்டுக் கூறப்படும் ஒரு எல்லை வரை மேலும் ஒரு கால நீடிப்புக்குப் பாராளுமன்றத்தின் அனுமதியைக் கோருதல் வேண்டும். பாராளுமன்றக் காலநீடிப்பு அவசியமெனக் கருதும்பட்சத்தில் அப்படியான நீடிப்பை வழங்கலாம்.

(7) எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மைக்காக ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து அகற்றுவதற்காக சனாதிபதிக்கும் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற் கான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் அப்பிரேரணையை பாராளுமன்றத்தின் சார்பில் சபாநாயகர் சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பார்.

(8) இக்கட்டளையின் பந்தி (2) இன்கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழுவினால் செய்யப்படும் நுண்ணாய்வுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகளும், குறிப்பிட்ட நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுள் எதனதும்மீது குற்றம் காணப்பட்டு தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை பகிரங்கப்படுத்தப்படலாகாது.

(9) இந்நிலையியற் கட்டளையில் “நீதிபதி” என்பது குடியரிசன் சனாதிபதி அவர்களால் அவரது கைப்பட எழுத்தாணைமூலம் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், உயர் நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் மற்றெல்லா நீதிபதிகள் ஆகியோர் எனப் பொருளாகும்.]

*[78ஆ. (1) (அ) அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தை; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளரை; அல்லது,

(இ) அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியை; அல்லது

(ஈ) அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையின்படி நியமிக்கப்பட்ட பாராளுமன்ற நிர்வாக ஆணையாளரை,

பதவியிலிருந்து அகற்றும்படி சனாதிபதிக்குப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கும் தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெறுமிடத்து, இக்கட்டளையின் பந்தி (2) இன்கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு மாதம் முடிவடைவதன் பின்னர் வரை அத்தீர்மானம் தொடரப்படலா காது.

---

* 1984, ஏப்பிரல் 4 ஆந் தேதிய ஆறாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

(2) இந்நிலையியற் கட்டளையின் பந்தி (1) இன்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறின், அத்தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக நுண்ணாய்வுசெய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட, ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களைக் கொண்ட பாராளுமன்றத் தெரிகுழுவொன்றைச் சபாநாயகர் நியமித்தல் வேண்டும்.

(3) இக்கட்டளையின் பந்தி (2) இன்கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு எந்த ஆளின் பதவி அகற்றுகை அதன் நுண்ணாய்வுக்குட்பட்டாதாகவுள்ளதோ அந்த ஆளுக்கு, தெரிகுழு எத்தீர்மானத்தைப் பின்பற்றி நியமிக்கப்பட்டதோ அந்தத் தீர்மனத்திற் கூறப்பட்ட விஷயங்களின் பிரதியொன்றைக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எழுத்துமூலம் எதிர்வாதக் கூற்றொன்றைச் சமர்ப்பிக்கும்படித் தேவைப்படுத்துதல் வேண்டும்.

**[(4) இக்கட்டளையின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் தெரிகுழு ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் தெரிகுழுவின் கூட்ட நடப்பெண் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அரைவாசிக்குக் குறையாததாக இருத்தலும் வேண்டும்.]

(5) இக்கட்டளையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு, அதனாற் செய்யப்படும் நுண்ணாய்வுகளின் முடிவில் அதன்முன் எடுக்கப்பட்ட சான்றுக் குறிப்புக்களுடன் அதன் முடிவெடுப்புக்களையும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதுடன், பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் தக்கதென அது கருதக்கூடிய எவ் விடயங்கள் பற்றியும் விசேட அறிக்கையும் செய்யலாம்.

(6) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பிரேரணையொன்றைச் சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமிடத்து, சபாநாயகர், பாராளுமன்றத்தின் சார்பில் அப்பிரேரணையைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.]

79. பாராளுமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு விடயத்திலும் ஓர் உறுப்பினர் ஒரு முறைக்கு மேல் உரையாற்றலாகாது. பின்வருவன இக்கட்டளைக்குப் புறநடையாகும் :-

(அ) புது விடயமெதையும் புகுத்தாமல் தமதுரையில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்ட பொருட்பகுதியை விளக்குவதற்காக உரையாற்றுதல்;

(ஆ) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின்மீது உரையாற்றுதல்.

80. ஒரு பிரேரணையை அல்லது திருத்தத்தைப் பிரேரிப்பவர் அதனை ஆதரித்து உரையாற்றலாம். ஆனால் அப்பிரேரணையோ அல்லது திருத்தமோ முறைப்படி வழிமொழியப்படும் வரை மேற்கொண்டு அதில் விவாதம் அனுமதிக்கப்படுதலாகாது; அப்பிரேரரணை சபைக்கு விடப்படலாகாது.

81. தமது இடத்தில் எழுந்து நின்று அக்கிராசனத்திற்கு தலைசாய்ப்பதன்மூலம் ஓர் உறுப்பினர் ஒரு பிரேரணையையோ திருத்தத்தையோ வழிமொழியலாம். இதனால் அவர் விவாதத்தில் பின்னொரு கட்டத்தில் உரையாற்றும் உரிமையை இழக்கமாட்டார்.

---

** 1985, சனவரி 8 ஆந் தேதிய பதினாறாவது திருத்தத்தால் மூல 78ஆ (4) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

82. சபாநாயகர் ஒரு பிரேரணையை முழுமையாகச் சமர்ப்பித்தபின் உறுப்பினர் எவரும் அப்பிரேரணைமீது உரையாற்றமுடியாது. ஒரு பிரேரணையில் "ஆம்" "இல்லை" எனும் குரல்களின் பின்னர் அந்தப் பிரேரணை முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகிவிடும்.

83. விவாதத்திற்குரிய ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டு விவாதித்து நிறைவேற்றப் பட்டால் அத்தகைய பிரேரணையயை மீண்டும் அதே கூட்டத்தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றிப் பிரேரிக்க எந்தவோர் உறுப்பினரும் தகுதியற்றவர் ஆவார். அத்துடன் பாராளுமன்றம் ஒரு கூட்டத்தொடரில் முடிபுசெய்த ஒரு விடயத்தை அதே கூட்டத் தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றி ஒரு விவாதத்தில் புதுப்பிக்கவும் ஓர் உறுப்பினர் தகுதியற்றவராவார்.

**பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள்**

84. பாராளுமன்றத்தில் பரிசீலனையில் இருக்கும் எந்தவொரு விடயத்திலும் உரையாற்றும்பொழுது பின்வரும் விதிகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படல் வேண்டும்:-

(i) ஒவ்வொரு உறுப்பினரும் சபாநாயகரை நோக்கியே உரையாற்ற வேண்டும்; சபாநாயகரின் அனுமதியுடனன்றி எழுந்துநின்றே உரையாற்ற வேண்டும்.

(ii) அவர் உரையாற்றும்போது ஒழுங்கை மீறினாலன்றி எவரும் இடையில் குறுக்கிடலாகாது.

(iii) அவர் தனது உரையை முடித்ததும் தமது இருக்கையில் மீண்டும் அமர வேண்டும்; உரையாற்ற விரும்பும் வேறு எந்த உறுப்பினரும் அப்பொழுது எழுந்து நிற்கலாம்.

(iv) ஒரே நேரத்தில் இரு உறுப்பினர்கள் எழுந்தால் முதலில் தன் பார்வையில் பட்ட உறுப்பினரை உரையாற்றும்படி சபாநாயகர் அழைக்க வேண்டும்.

(v) ஒவ்வொரு உறுப்பினரும் விவாதிக்கப்படும் விடயத்திற்குட்பட்டே தமது உரையை நிகழ்த்த வேண்டும்.

(vi) சட்ட நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குட்பட்டுள்ள அல்லது சட்ட முடிபை எதிர்நோக்கியுள்ள எவ்விடயம் பற்றியும் ஓர் உறுப்பினர் குறிப்பிடலாகாது.

(vii) உறுப்பினரெவரும் மற்றெவ்வுறுப்பினரையும் பெயரினால் குறிப்பிடுதல் ஆகாது.

(viii) ஓர் உறுப்பினர் இன்னுமோர் உறுப்பினர் மீது தகாத நோக்கம் கற்பிக்கக் கூடாது.

(ix) ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் முன் உள்ள பிரேரணை பற்றியோ அதன்மீது பிரேரிக்கப்பட்ட திருத்தம் பற்றியோ உரையாற்றலாம்.

(x) பாராளுமன்றத்தின் முன் பிரேரணை இல்லாவிடினும் அதன் தயவுடன் ஓர் உறுப்பினர் தனது தனிப்பட்ட விடயங்கள பாராளுமன்றத்தில் விளக்க லாம்; ஆனால் அவ்விடயங்கள் பற்றி விவாதம் எதுவும் அனுமதிக்கப்படலா காது. அத்துடன் அவர் கண்டிப்பாகத் தமது நன்னடத்தையை எடுத்துக் காட்டும் வரம்புக்குள் நிற்றல் வேண்டும்.

(xi) பாராளுமன்றத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர் அனைவரும் உரையாற்ற வாய்ப்புப் பெற்ற பின்னரும் ஒரு தீர்மானம் அல்லது ஒரு பிரேரணை சபைக்கு விடப்படுமுன்னரும் அத்தீர்மானத்தை அல்லது அப்பிரேரணை யைப் பிரேரித்த உறுப்பினர் விவாதத்திற்குப் பதில் அளிக்கலாம்.

(xii) விதிகளை மீறும் ஓர் உறுப்பினரை விதிகளுக்கு ஒழுகி நடக்குமாறு உடனடியாகச் சபாநாயகரோ ஒழுங்குப் பிரச்சினையை ஒட்டிப் பேச எழும் வேறெந்த உறுப்பினரோ கோரலாம்.

**உரையாற்றா உறுப்பினர்களுக்கான விதிகள்**

85. பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிலோ விவாதம் நிகழும்போது ஓர் உறுப்பினர் -

(i) பாராளுமன்றதிற்குள் அல்லது குழுவிற்குள் பண்புடன் பிரவேசிக்க வேண்டும்;

(ii) பாராளுமன்றத்தில் ஒழுங்கற்றுக் குறுக்கே போகக்கூடாது;

(iii) பாராளுமன்றதின் முன்னிருக்கும் விடயத்துக்குத் தொடர்பற்ற செய்தித்தாள் கள், நூல்கள் அல்லது கடிதங்கள் முதலியனவற்றை வாசித்தலாகாது;

(iv) புகைத்தலாகாது;

(v) இன்னுமோர் உறுப்பினர் உரையாற்றும்போது அமைதியாயிருக்க வேண்டும்; உரையாற்றும் உறுப்பினர் இடமளித்தாலன்றி அவரை இடை மறித்தலாகாது;

**முழுப் பாராளுமன்றக் குழு**

86. (1) பாராளுமன்றம் தன்னை ஒரு குழுவாக்கத் தீர்மானிக்கும் தீர்மானம் ஒன்றின் மூலம் ஒரு முழுப் பாராளுமன்றக் குழு நியமிக்கப்படும்.

(2) இத்தகைய தீர்மானம் ஏற்கப்படுமிடத்து வினா விடுக்காமலே சபாநாயகர் அக்கிராசனத்தை விட்டகல்வார்.

87. சபாநாயகர் அல்லது அவர் இல்லாதவிடத்துப் பிரதிச் சபாநாயகர் முழுப் பாராளு மன்றக் குழுவின் தவிசாளராகத் தலைமைவகித்தல் வேண்டும். இருவரும் சமுகமளிக்காத விடத்து குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமைவகித்தல் வேண்டும். சபாநாயகரும், பிரதிச் சபாநாயகரும், குழுக்களின் பிரதித் தவிசாளரும் சமுகமளிக்காதவிடத்து தவிசாளர் குழாமிலுள்ள உறுப்பினரொருவர் தலைமைவகித்தல் வேண்டும்.

88. முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளர் ஒருவர் இதற்கெனச் சபாநாயகர் நியமிக்கும் இருக்கையில் அமர்தல் வேண்டும்.

89. சபாநாயகர் என்பதற்குப் பதிலாக தவிசாளர் என்ற மாற்றத்துடன் 42 முதல் 44 வரையிலுள்ள நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க முழுப் பாராளுமன்றக் குழுவில் வாக்கெடுப்பு நிகழுதல் வேண்டும்.

90. ஏனைய உறுப்பினர்களின் வாக்குகள் ஒரேயளவாகப் பிரிந்தாலன்றி முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளர் வாக்களித்தலாகாது; வாக்குகள் ஒரேயளவாகப் பிரிவுற்றால் தவிசாளர் தமது தீர்வு வாக்கை அளித்தல் வேண்டும்.

91. சபாநாயகர் தலைமைவகிக்கும் சமயங்களில் நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் விதிகள் முழுப் பாராளுமன்றக் குழு நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்; இதற்குப் புறநடையாவன -

(அ) ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவையில்லை;

(ஆ) ஒரு பிரேரணை வழிமொழியப்படவேண்டியதில்லை;

(இ) ஒரே பிரேரணைமீது ஓர் உறுப்பினர் ஒரு முறைக்குமேல் உரையாற்றலாம்.

92. பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயற்களை மாத்திரமே ஒரு முழுப் பாராளுமன்றக்குழு பரிசீலனை செய்யும்.

93. ஒரு முழுப் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகள் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும்.

### தெரிகுழுக்கள்

94. ஒரு தெரிகுழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு சட்டமூலத்திலோ விடயத்திலோ அத்தெரிகுழு சாட்சியங்களை விசாரிக்க வசதிசெய்ய வேண்டுமென விரும்பினால் ஆட்க ளையோ பத்திரங்களையோ பதிவேடுகளையோ அத்தெரிகுழு வரவழைக்க ஒரு தீர்மானம் மூலம் பாராளுமன்றம் அதிகாரம் வழங்கலாம். இத்தகைய அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு குழுவும் தன்முன் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் பதிவறிக்கையுடன் பாராளுமன்றத் திற்குத் தனது கருத்துக்கள், குறிப்புரைகள்பற்றி அறிக்கையிட அனுமதி பெற்றிருக்கும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது தகுந்ததெனத் தான் கரு தும் எந்த விடயம்பற்றியும் ஒரு விசேட அறிக்கை சமர்ப்பிக்கவும் அனுமதி பெற்றிருக்கும்.

95. ஒரு தெரிகுழு பாராளுமன்றத்தின் அனுமதியின்றி பன்னிரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தலாகாது. இத்தகைய அனுமதிகோரும் பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவை.

*96. [தெரிகுழுவொன்றின் விசாரணை விரிவு, எக்கட்டளையின்கீழ் அக்குழு நியமிக் கப்படுகின்றதோ, அக்கட்டளையின் நியதிகளால் வரையறுக்கப்படுதல் வேண்டும். ஆனால், அது பாராளுமன்றத்தின் பணிப்பினால் விரிவாக்கப்படவோ, மட்டுப்படுத்தப் படவோ முடியும். அத்தகைய கட்டளை குழுவின் இறுதி அறிக்கை அளிப்பதற்குரிய காலத் தைக் குறித்துரைத்தல் வேண்டும். எனினும், அத்தகைய காலத்தினைப் பாராளுமன்றம் ஒரு குறித்த திகதி வரை நீடிக்கமுடியும்.]

97. ஒவ்வொரு தெரிகுழுவின் தவிசாளரும் அங்கத்தவர்களும் சபாநாயகரால் நியமிக் கப்படல் வேண்டும். தவிசாளர் சமுகமளிக்காதவிடத்து தெரிகுழுவின் அங்கத்தவர்களினால் தெரியப்பெற்ற ஒரு குழு உறுப்பினர் தவிசாளராக வேண்டும்.

98. தவிசாளர் நியமிக்கும் நேரத்திலும் இடத்திலும் குழு தனது முதற்கூட்டத்தை நிகழ்த்தும். முதற் கூட்டத்திற்குப் பின்நிகழும் கூட்டங்கள் குழு தீர்மானிக்கும் நேரங் களிலும் இடங்களிலும் நிகழ்தல் வேண்டும்.

99. வேறெவ்வகையிலும் கட்டளையிடப்படாதவிடத்து ஒரு தெரிகுழுவின் கூட்ட நடப்பெண் நான்காக இருக்கும்.

100. காலத்திற்குக்காலம் ஒரு தெரிகுழு உறுப்பினரின் இறப்பு அல்லது இராஜினாமா போன்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறு இறந்த அல்லது இராஜினாமாச்செய்த உறுப்பினரின் இடத்திற்குச் சபாநாயகர் வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம். எந்தவொரு உறுப்பின ரும் தெரிகுழுவொன்றின் அடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்கு அக்குழுவிடம் முன்கூட் டியே அனுமதி கோராமல் சமுகமளிக்காதிருந்தால் அவர் அக்குழுவில் தன் அங்கத்தவத்தை இழந்தவராகக் கருதப்படுதல் வேண்டும். இந்நிலையியற் கட்டளையின்கீழ் சபாநாயகர் செய்யும் ஒவ்வொரு நியமனமும் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படல் வேண்டும்.

101. ஒரு தெரிகுழுவின் தவிசாளருக்கு முதல் வாக்கு ஒன்று உண்டு; அளிக்கப்பட்ட வாக்குகள் ஒரேயளவாகப் பிரிவுற்றால் அவருக்குத் தீர்வு வாக்கு ஒன்றும் உண்டு.

---

* 1993 பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தோராவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

102. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் ஒரு தெரிகுழு தனது புலன் விசாரணைகளைத் தொடர்ந்து நிகழத்தலாம். தனது அறிக்கையைக் குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும்வரை அல்லது பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின்மீதன்றி பாராளுமன்றத்தின் ஒரு தெரிகுழுவைக் கலைக்க முடியாது.

103. எத்தெரிகுழுவினதும் அமர்வில் ஒவ்வொரு நாளும் சமுகமகளிக்கும் உறுப்பினர்களின் பெயர்கள், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பெயர்கள், வாக்கெடுப்பு எதுவும் நிகழ்ந்தால் அங்கு பிரேரிக்கப்பட்ட பிரேரணை, பிரேரித்தவர் பெயர், அப்பிரேரணைமீது சமுகமளித்த உறுப்பினர்கள் அளித்த வாக்குகள் ஆகியன தெரிகுழுவின் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும். அத்தகைய கூட்ட அறிக்கைகள் சாட்சியக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டு குழுவின் அறிக்கையுடன் அச்சிடப்படல் வேண்டும்.

### ஆலோசனைக் குழுக்கள்

*104. [தெரிவுக்குழுவானது, பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒவ்வொன்றினதும் தொடக்கத்திலும் காலத்திற்குக் காலம் அவசியம் ஏற்படும் பொழுதும் அமைச்சரவையின் அமைச்சுக்களது எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையில் ஆலோசனைக் குழுக்களை நியமித்தல் வேண்டும்.]

105. குழுவுக்குப் பரிசீலனை செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கும் கருமங்களுக்கும் பொறுப்பான அமைச்சரே ஆலோசனைக் குழுவொன்றின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

எனினும், சனாதிபதியின் பொறுப்பிலுள்ள அமைச்சுக்கள் விடயத்தில் அவ்வமைச்சுக்களின் பிரதி அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக்களின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

**106. [ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் தெரிவுக்குழுவால் நியமிக்கப்பட்டிருக்கும் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாததும் † [பன்னிரண்டு உறுப்பினர்களுக்கு] மேற்படாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.]

†*[106அ. தெரிவுக்குழு காலத்துக்குக்காலம் ஆலோசனைக்குழு உறுப்பினரொருவர் மரணமடையும் அல்லது பதவி துறக்கும் அல்லது உறுப்பாண்மையை வறிதாக்கும் விடயத்தில், ஆலோசனைக் குழுவின் அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு இன்னோர் உறுப்பினரை நியமிக்கலாம். எனினும், தெரிவுக் குழுவானது தேவையெனக் கருதுமிடத்து ஏதேனும் ஆலோசனைக் குழுவின் வேறெவரேனும் உறுப்பினரை விடுவித்து அவரது இடத்திற்கு வேறு உறுப்பினரை நியமிக்கும் உரிமையை குழு தன்னகத்தே கொண்டிருக்கும். இக்கட்டளையின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு நியமனமும் பாராளுமன்றத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் அதற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.]

---

* 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்திரண்டாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

** 1984, ஏப்பிரல் 4 ஆந் தேதிய ஏழாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

† 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்திமூன்றாவது திருத்தத்தால் மூலச் சொற்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

† *1984, ஏப்பிரல் 4 ஆந் தேதிய எட்டாவது திருத்தத்தால் சேர்த்துக்கொள்ளப்பட்டது. பின்னர் 1985, சனவரி 8 ஆந் தேதிய பதினேழாவது திருத்தத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

***[106ஆ. தனது கையொப்பமுடனான விண்ணப்பத்தின்மூலம் ஆலோசனக்குழு வின் முன்கூட்டிய அனுமதியைப்பெறாமல் ஆலோசனைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறும் எவரேனும் உறுப்பினர், அத்தகைய ஆலோச னைக் குழுவிலுள்ள அவரது உறுப்பாண்மையை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தெரிவுக் குழுவினால் இணக்கங் காணப்பட்டாலன்றி, அதே கூட்டத் தொடரின்போது அக்குழுவிற்கு மீண்டும் தெரிவு செய்யப்படவும் ஆகாது;

எனினும், அவ்வுறுப்பினர் முன்கூட்டியே பெறப்பட்ட பாராளுமன்ற அனுமதியுடன் பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருக்கும் காலப்பகுதிக்குள் ஒரு தினத்தில் அத்தகைய குழுவின் ஏதேனும் கூட்டம் நடைபெற்றால், முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.]

107. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் இயன்றவரை பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளையும் பிரதிபலிக்கும்வகையில் அமைதல் வேண்டும். ஆலோசனைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது தெரிவுக்குழுவானது உறுப்பினர்களின் விருப்பங் களை அறிய வேண்டுமென்பதோடு இயன்றவரையில் அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப இடமளிக்கவும் வேண்டும்.

108. தெரிவுக்குழு மாறாகத் தீர்மானித்தாலொழிய எந்தவோர் உறுப்பினரும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசனைக் குழுக்களில் கருமமாற்றக்கூடாது.

****[108அ. பாராளுமன்ற உறுப்பினர் எவரும் தாம் அங்கம் வகிக்காத ஆலோசனை க் குழுவொன்றின் கூட்டத்திற்கு அக்குழுத் தவிசாளரின் வேண்டுகோளின்மீது சமுகமளிக்க லாம் என்பதுடன், குழுத் தவிசாளரின் வேண்டுகோளுக்கமைய வெளியேறவும் வேண்டும்.]

*****109. [ஆலோசனைக் குழுவொன்றின் கடமை, சட்டமூலம், சட்டவாக்கத்துக் கான பிரேரணைகள், குறைநிரப்பல் அல்லது பிறமதிப்பீடுகள், செலவினக் கூற்றுக்கள், பிரேரணைகள், ஆண்டறிக்கைகள் அல்லது பத்திரங்கள் உட்பட தவிசாளரினால் அல்லது பாராளுமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள்பற்றி விசாரணை செய்து அறிக் கையிடுதலாகும்.]

110. ஓர் ஆலோசனைக்குழு அதன் தவிசாளர் மூலம் எந்தவொரு சட்ட மூலத்தையோ பிரேரணையையோ சமர்ப்பிக்க அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

†*[111. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் தவிசாளர் அழைக்கும்பொழுது கூட வேண்டும். குறைந்தபட்சம் மாதம் ஒருமுறையேனும் தவிசாளரினால் குழு கூட்டப்பட்டு, பயனுள்ள வேலை நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிசாளருடனும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துடனும் கலந்தாலோசித்து உறுதிப்படுத்துவது ஒவ்வோர் அமைச்சுச் செயலாளரதும் கடமையாகும்.

எனினும், அத்தகைய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூவர் எழுத்து மூலம் வேண்டுமிடத்து, இயன்றளவு விரைவில் குழுக் கூட்டமொன்று கூட்டப்படுல் வேண்டும்.]

---

*** 1985, சனவரி 8 ஆந் தேதிய பதினெட்டாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

****1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்திநான்காவது திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது.

*****1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தைந்தாவது திருத்தத்தின் மூலம் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது.

† *1984, ஏப்பிரல் 4ஆந் தேதிய ஒன்பதாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. பின்னர் 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தாறாவது திருத்தத்தால் மீண்டும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

112. செயலாளர் நாயகமோ அல்லது அவரால் நியமிக்கப்படும் பாராளுமன்றத்தின் எந்தவோர் உத்தியோகத்தரோ அத்தகைய குழு ஒவ்வொன்றினதும் செயலாளராக இருத்தல் வேண்டும். அவரின் கடமைகளையும் கருமங்களையும் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான ஏனைய பணியாளர்கள், வசதிகள், தேவைகள் ஆகியன அவருக்கு அளிக்கப்படல் வேண்டும்.

113. ஆலோசனைக் குழுவுக்குப் பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை, ஆற்றுப்படுத்தப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அதன் தவிசாளரால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவசியமெனக் கருதுமிடத்து குறிப்பிட்ட ஏதாவது விடயம் மேலும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் எடுத்தியம்பலாம். குழு உறுப்பினர் எவரதும் தனிப்பட்ட அபிப்பிராயம் அறிக்கையில் சேர்க்கப்படலாம்.

எனினும், ஆலோசனைக் குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் அவ் விடயங்கள்மீதான ஆலோசனைக் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப் படும் வரை பாராளுமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

114. ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஆட்களையும் பத்திரங்களையும் பதிவே டுகளையும் வரவழைத்துப் பரிசீலிப்பதற்கும் இடத்துக்கிடம் மாறுவதற்கும் அதற்கு ஆற்றுப் படுத்தப்பட்ட விடயங்கள் பற்றி பூரண பரிசீலனைக்கு அவசியமான சகல கருமங்களையும் செய்வதற்கும் பாராளுமன்றத்தின் எந்தவோர் ஒத்திவைப்பினாலும் தடைப்படாமல் கூடு வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

*115. [ஆலோசனைக் குழுவொன்றின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான கூட்ட நடப்பெண் இல்லாமல் அத்தகைய ஆலோசனைக் குழு பணியாற்றாது பார்த்துக்கொள்ளுவது அதன் தவிசாளரின் கடமையா தலும் வேண்டும்.]

**உப குழுக்கள்**

**[115அ (i) ஒவ்வொரு ஆலோசனைக் குழுவும், அது அவசியமெனக் கருதும் போது, எவையேனும் கருமங்கள்பற்றி, அத்தகைய ஆலோசனைக் குழுவால் பணிக்கப்படுகின்றவாறு, விசாரணைசெய்து அத்தகைய ஆலோசனைக் குழு குறித்துரைக்கும் ஒரு காலப் பகுதிக்குள் அறிக் கையிடுவதற்கென அதன் உறுப்பினர்களைக்கொண்ட உப குழுக் களை நியமிக்கலாம். அத்தகைய ஆலோசனைக் குழு அவசியமெனக் கருதும்போது, ஏதேனும் அத்தகைய உப குழு தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கென அதன்முன்னர் எவரேனும் ஆளை ஆணை யிட்டழைத்து விசாரணை செய்வதற்கும், ஏதேனும் பத்திரத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் கோருவதற்கும் பரிசோதிப்ப தற்கும், அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்களை முழுமையாகப் பரிசீலிப்பதற்கென இடத்துக்கிடம் செல்வதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் அவ் உபகுழு கூடுவதற்கும், அதற்கு அதிகாரம் வழங்கலாம்.

---

* 1985, சனவரி 8 ஆந் தேதிய பத்தொன்பதாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

** 1985, சனவரி 8 ஆந் தேதிய இருபதாவது திருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது.

(ii) ஒவ்வொரு உபகுழுவும், ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்படும் ஒரு தவிசாளரரையும் இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உபகுழுவின் கூட்ட நடப்பெண் தவிசாளர் உட்பட இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) ஓர் உபகுழுவின் தவிசாளராகப் பணியாற்றும் ஓர் உறுப்பினர் ஒரே சமயத்தில் அத்தகைய ஆலோசனைக் குழுவின் வேறோர் உபகுழுவில் தவிசாளராகப் பணிபுரிதலாகாது.

(iv) பாராளுமன்றச் செயலாளர் நாயகமோ அல்லது அவரால் நியமிக்கப்படும் வேறோர் அலுவலரோ ஒவ்வொரு உபகுழுவினதும் செயலாளராதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு உபகுழுவினதும் கூட்ட அறிக்கைகள் அச்செயலாளரால் தயாரிக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

(v) ஆலோசனைக் குழு வேறுவிதமாகத் தீர்மானித்தாலொழிய உபகுழுக்களின் எல்லாக் கூட்டங்களும் பாராளுமன்றத்திலேயே நடாத்தப்பட வேண்டும்.]

## நிலையியற் குழுக்கள் (சட்டவாக்கம்)

*116. நிலையியற் குழுவொன்றின் கடமை, பாராளுமன்றத்தினால் அதற்கு அனுப்பப்படும் சட்டமூலங்கள்/உத்தேச நியதிச் சட்டங்களை ஆராய்வதற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அந்நோக்கத்திற்காக ஆட்களையும், பத்திரங்களையும், பதிவேடுகளையும் வரவழைப்பதற்கு அதற்கு அதிகாரமிருத்தல் வேண்டும்.

*117. நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படும் சட்டமூலம் /உத்தேச நியதிச்சட்டம் எதனையும் ஆராய்வதற்கான குழுவின் முதலாவது கூட்டம் தவிசாளர் நியமிக்கும் அத்தகைய காலத்திலும் இடத்திலும் நடாத்தப்படல் வேண்டும். அதே சட்டமூலத்தை/உத்தேச நியதிச்சட்டத்தை ஆராய்வதற்கான அடுத்தகூட்டங்கள் குழு முடிவுசெய்யும் அத்தகைய காலங்களிலும் இடங்களிலும் நடாத்தப்படுதல் வேண்டும். ஆயின், குழு அவ்வாறு செய்யத்தவறுமிடத்து, தவிசாளர், செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து, அத்தகைய காலங்களையும் இடயங்களையும் நியமித்தல் வேண்டும்.

*118. (1) நிலையியற் குழுவொன்றின் தவிசாளருக்கு மூல வாக்கு ஒன்றுண்டு. அத்துடன் வாக்குகள் சமமாகப் பிரிந்திருக்குமிடத்து, அவருக்கு அறுதியிடும் வாக்கொன்றும் உண்டு.

(2) நிலையியற் குழு ஒன்றுக்கு அனுப்பப்படும் சட்டமூலம் ஒன்றுக்குப் பொறுப்பான ஓர் உறுப்பினர், அக்குழுவின் ஓர் உறுப்பினராக இல்லாவிடின், அத்தகைய சட்டமூலம் ஆராயப்படும் கூட்டம் எதற்கும் சமுகமளிக்கவும், அச்சட்டமூலத்தைப்பற்றி உரை நிகழ்த்தவும், அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எழும் எப்பிரச்சினை குறித்தும் திருத்தங்களைப் பிரேரித்து அக்குழுவின் ஓர் உறுப்பினர்போன்று வாக்களிக்கவும் அவருக்கு உரிமையுண்டு.

---

* 1989 திசெம்பர் 22 ஆந் தேதிய இருபத்தேழாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

*119. நிலையியற் குழுக்களின் நடைமுறை, ஏறத்தாழ முழுப் பாராளுமன்றத்தையும் கொண்ட குழுக்களின் அதே நடைமுறையாக இருத்தல் வேண்டும். அத்துடன் நிலையியற் குழுவொன்றின் கூட்டக் குறிப்புகள் முழுப்பாராளுமன்றத்தையும் கொண்ட குழுவொன்றின் கூட்டக் குறிப்புகள் பதியப்படுதல்போன்றே பதியப்படுதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்றம் விதித்த காலவெல்லை, ஏதுமிருப்பின் அதற்குள் பாராளுமன்றத்திற்கு, சட்டமூலத்துடனும் /உத்தேச நியதிச் சட்டத்துடனும் அதன்மீதான அறிக்கையுடனும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*120. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் ஒரு நிலையியற் குழு அதன் கலந்தாராய்வுகளை நடத்தலாம் :

ஆயின், எவ்வாறாயினும் ஒரு கூட்டத்தொடரின் இறுதியில் நிலையியற் குழுவொன்று அதன் கலந்தாராய்வினை முடித்து அறிக்கையைப் பாராளுமன்றத்துக்கு அளித்திராதவிடத்து, அதன் நிகழ்ச்சிகள், பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அச்சட்டமூலம் / உத்தேச நியதிச் சட்டம் அனுப்பப்படத்தக்க நிலையியற் குழுவுக்கு அனுப்பப்பட்டதான நிலையிலிருக்கும்.

### சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள்

121. தெரிவுக்குழு – ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்தின்போதும், ஆலோசனைக் குழுக்கள், சட்டவாக்க நிலையியற் குழுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, கருமங்கள் (கூட்ட நடப்பெண் உட்பட) அவற்றின் அமைப்பு ஆகியவற்றை ஆராய்வதற்கும், அவை பற்றித் தங்கள் கருதுக்களை மிகவும் கூடிய விரைவில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படும் அத்தகைய ஆலோசனைக் குழுக்களிலும், சட்டவாக்க நிலையியற் குழுக்களிலும் கடமையாற்றக்கூடிய உறுப்பினர்களை நியமிப்பதற்கும், சபைக்குழு, நிலையியற் கட்டளைகள் குழு, பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு, அராசாங்கக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, சிறப்புரிமைகள் பற்றிய குழு, பொது மனுக்குழு என்பவற்றில் கடமையாற்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கும் தெரிவுக்குழு எனப்படும் ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டும்.

†*[தெரிவுக்குழு சபாநாயகரைத் தவிசாளராகவும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அல்லது ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தினால் பெயர் குறிக்கப்படும் அவர்களின் நியமித்தவர்கள் ஆகியோருட்பட பதினேழு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.] பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் குழுக் கூட்டங்கள் நிகழவும், அவ்வப்போது அறிக்கையிடவும், எந்தவொரு குழுவிற்கும் எந்தவொரு உறுப்பினர் நியமிக்கப்படும்போது அதுபற்றிப் பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கும் குழு அனுமதி பெற்றிருக்கும்.

122. சபைக்குழு – சபாநாயகரைத் தவிசாளராகவும் தெரிவுக்குழு நியமிக்கும் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்ட சபைக்குழு எனப்படும் குழு ஒன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் சௌகரியம், வசதி ஆகியவற்றுடன் தொடர்புடைய எல்லா விடயங்கள் பற்றியும் பரிசீலித்து ஆலோசனை கூறுவதற்கென இருத்தல் வேண்டும். இக்குழுவின் கூட்ட அறிக்கைகள் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

---

* 1989 திசெம்பர் 22 ஆந் தேதிய இருபத்தேழாவது திருத்தத்தால் மூலநிலையியற் கட்டளை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

†* 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தேழாவது திருத்தத்தால் மூலச் சொற்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

123. நிலையியற் கட்டளைகள் குழு. – தவிசாளராகச் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயாகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய நிலையியற் கட்டளைகள் குழு எனப்படும் குழு ஒன்று இருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தின் அலுவல் தொடர்பான நடைமுறை, ஒழுங்கு ஆகிய விடயங்களைப் பரிசீலிப்பதும் அவசியமெனக் கருதப்படும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது சேர்க்கப்படவேண்டியவை பற்றி விதந்துரைத்தலும் நிலையியற் கட்டளைகள் தொடர்பாகப் பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்படும் எல்லா விடயங்கள் பற்றியும் அறிக்கையிடுதலும் இக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

124. பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு. – சபாநாயகரைத் தவிசாளராகவும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், *[தெரிகுழுவால் நியமிக்கப்படும் வேறு எட்டு உறுப்பினர்கள்] ஆகியோரையும் உள்ளடக்கிய பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும். பாராளுமன்றச் சபை முதல்வருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் சபாநாயகரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படக் கூடிய பாராளுமன்ற அலுவல்களின் ஆலோசனைக்கென ஒதுக்கப்படவேண்டிய நேரம் மற்றும் விடயங்கள் ஆகியவை சம்பந்தமாகப் பரிசீலனை செய்து முடிவெடுத்தல் குழுவின் கடமையாதல் வேண்டும். இக்குழுவின் கூட்ட அறிக்கைகள் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

125. அரசாங்கக் கணக்குக் குழு. – (1) தெரிகுவுக்குழுவால் நியமிக்கப்படும் **[பன்னிரண்டு உறுப்பினர்களை] உள்ளடக்கிய அரசாங்கக் கணக்குக் குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்க்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் அவை பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடனும் உள்ளூர் அதிகார சபைகள் பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடனும் பரிசோதித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) குழு காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு திணைக்களத்தினதும் உள்ளூர் அதிகாரசபையினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்பாடும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றினின்று எழும் எந்தவொரு விடயம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றின் எல்லாக் கணக்குகளையும், நிதியங்களையும், நிருவாகத்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.

---

* 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தெட்டாவது திருத்தத்தால் மூலச் சொற்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டன.

** 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய முப்பத்தொன்பதாவது திருத்தத்தால் மூலச் சொற்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டன.

(5) குழு அல்லது அதன் உபகுழுக்களின் ஏதாவதொன்று தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன் முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட் பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் முதலியன வற்றை பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(6) குழுவின் கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

126. அசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு. – (1) தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் *[பன்னிரண்டு உறுப்பினர்களை] உள்ளடக்கிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் எழுத்துமூலமான எச்சட்டதின் கீழும் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகளினதும் கணக்குகளை அவைபற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடன் பரிசோதிப்பது இக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) குழு, காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு அரசாங்கக் கூட்டுத்தாப னம் அல்லது எழுத்துமூலமான எச்சட்டத்தின்கீழும் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்ப ட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகள் ஆகியவற்றின் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், வரவு செலவுத்திட்டங்கள், வருடாந்த மதிப்பீடுகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்பாடும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றினின்று எழும் எந்தவொரு விடயம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய அரசாங் கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது எழுத்துமூலமான எச்சட்டத்தின்கீழும் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகளின் எல்லாக் கணக்குகளை யும், வரவு செலவுத்திட்டங்கள், வருடாந்த மதிப்பீடுகளையும், நிதியங்களையும், நிருவா த்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.

(5) குழு அல்லது அதன் உப குழுக்களில் ஏதாவதொன்று தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன்முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட்பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரம் உடையாதிருத்தல் வேண்டும்.

(6) குழுவின் கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

127. சிறப்புரிமைகள் பற்றிய குழு.– பிரேரணை கொண்டுவரப்பட்டு பாராளுமன்ற த்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஒவ்வொரு சிறப்புரிமை பற்றிய பிரச்சினையையும் பரிசீலனை செய்வதற்காகவும் ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் உண்மைகளைக் காட்டி சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதா என்பது பற்றித் தீர்மா னிப்பதற்கும் அவ்வாறெனில் மீறலின் தன்மை, அது ஏற்படக் காரரணமாயிருந்த சூழ்நிலை கள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கும் விதப்புரைகளைச் செய்வதற்கும் குழு பொருத்த மானதெனக் கருதக்கூடியதான அத்தகைய விதப்புரையைச் செயற்படுத்தப் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையைக் கூறவும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் பத்துக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புரிமைகள் பற்றிய குழு எனப்படும்

* 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய நாற்பதாவது திருத்தத்தால் மூலச் சொற்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டன.

குழுவொன்று இருத்தல் வேண்டும். அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஒவ்வொரு பிரச்சினையினதும் அறிக்கையை கூடியவிரைவில் பாராளுமன்றத்திற்குக் குழு சமர்ப்பித்தல் வேண்டும். குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துவதற்குத் தேவையான எவரேனும் ஆட்கள் ஏதேனும் ஆவணங்கள் அல்லது இதர பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும் மற்றும் எல்லா நடவடிக்கைகளை எடுப்பதற்கும் குழு அதிகாரம் பெற்றிருக்கும்.

*128. பொது மனுக்குழு. – (1) தெரிவுக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களைக் கொண்டமைவதும் பொது மனுக்குழு என்றழைக்கப்படுவதுமான குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) 25அ (10) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்களைப் பரிசீலிப்பது இக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தபானம் உள்ளூர் அதிகாரசபை அல்லது இவற்றையொத்த பிற நிறுவனம் ஒன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை ஒன்று மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை மனு எதுவும் வெளிப்படுத்துகின்றது என்று குழு கருதுமிடத்து, விசாரித்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி அத்தகையை மனுவை, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்சுமன்) ஆற்றுப்படுத்தப்படலாம்.

(4) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்குக் குழு ஆற்றுப்படுத்திய மனு ஒன்று தொடர்பில் அவரின் விசாரணைகள் முடிவுற்றதன்மேல், அவர் குழுவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையைப் பரிசீலித்த பின்னர் அத்தகைய அறிக்கையின்மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை மீதான தனது அபிப்பிராயத்தைக் குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) குழுவானது, அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமீது அதனது அபிப்பிராயத்தை அத்தகைய மனுக்களின் மீது தகுந்ததென அது காணும் அத்தகைய வேறு அவதானிப்புகளுடன் சேர்த்துக் காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(6) குழுவானது, அது அவசியமானதெனக் கருதும்போது, குழு பணிக்கக் கூடியதான அத்தகைய மனுக்கள் அல்லது அறிக்கைகள் மீது பரிசீலனைசெய்து குழுவுக்கு அறிக்கை செய்யவென அதனது உறுப்பினர்களின் உப குழுக்களை நியமிக்கலாம்.

(7) தனது கடமைகளைப் புரிவதற்கு குழு அல்லது அதன் உப குழுக்கள் எதுவும் எந்தவோர் ஆளையும் தன்முன் அழைக்கவும் விசாரிக்கவும், ஏதேனும் பத்திரம், புத்தகம், பதிவேடு அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறவும் பரிசீலனை செய்யவும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், களஞ்சியங்களையும் ஆதனங்களையும் பார்வையிடுவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

---

* 1981, நவம்பர் 3 ஆந் தேதிய மூன்றாவது திருத்தத்தால் மூல நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**128 அ. **உயர்பதவிகள் பற்றிய குழு –**

(1) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு ஏதேனும் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட, அல்லது பதவி எதனையும் வகிப்பதற்குப் பெயர் குறிப்பிட்ட, ஆள் எவரதும் தகுதியை ஆராய்ந்து அவரைப்பற்றி விதப்புரை செய்வதற்குத் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட பன்னிரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட உயர் பதவிகள் பற்றிய குழு எனப் பெயர் கொண்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) இக்குழு அதன் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஆள் எவரையும் அதன்முன் ஆணையிட்டழைத்து விசாரிக்கவும் எப்பத்திரத்தையும், நூலையும் பதிவுச்சுவட்டையும் அல்லது வேறு ஆவணைத்தையும் வரவழைத்து ஆராயவும், மேலே (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆளின் ஏற்புடைமை பற்றி முழுமையாக நுண்ணாய்வு செய்வதற்கு அவசியமான எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் தத்துவம் பெற்றதாகவிருக்கும்.

(3) காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் அதன் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதற்கும் குழுவுக்குத் தத்துவமுண்டு.

(4) குழுவின்கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.]

129. குழுக்களின் சிறப்பு நோக்கங்களுக்காக பின்வருவன கையாளப்படலாம் :-

(அ) நிலையியற் கட்டளைகளில் வேறு விதமாகக் குறிப்பிட்டாலன்றி ஒவ்வொரு குழுவும் அலுவலைத் தொடங்குமுன் அக்குழு உறுப்பினர்களில் ஒருவரைத் தவிசாளராகத் தெரிவு செய்தல் வேண்டும்;

(ஆ) தவிசாளருக்கு முதல் வாக்கொன்றும் அளிக்கப்பட்ட வாக்குகள் ஒரேயளவாகப் பிரிவுற்றால் தீர்வு வாக்கொன்றும் உண்டு;

*[(இ) வெற்றிடங்கள் தெரிவுக் குழுவால் நிரப்பப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வெற்றிடமும் நிரப்பப்படும்போது அது பற்றி பாராளுமன்றத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் அதற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) நிலையியற் கட்டளையில் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டுமென்பதோடு தேவையான கூட்ட நடப்பெண் இல்லாதபோது அத்தகைய குழு பணியாற்றாது பார்த்துக் கொள்வது அதன் தவிசாளரின் கடமையாதலும் வேண்டும்.]

(உ) பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டம் நடைபெறலாம்;

(ஊ) தவிசாளரால் அழைப்பு விடுக்கப்படும்போதெல்லாம் கூட்டங்கள் நடைபெற வேண்டும்;

(எ) தவிசாளர் வருகைதராவிடில் குழு தெரிவு செய்யும் அத்தகைய உறுப்பினர் தலைமை வகித்தல் வேண்டும்;

---

** 1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய நாற்பத்தோராவது திருத்தத்தின் மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளது.

* 1985, சனவரி 8 ஆந் தேதிய இருபத்தோராம் திருத்தத்தால் மூல 129 (இ) உம் (ஈ) உம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**[(ஏ) அத்தகைய குழுவின் அனுமதியை முன்கூட்டியே பெறாமல் குழுவின் அடுத்தடுத்து மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய குழுவிலுள்ள அவரது உறுப்பாண்மையை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்;

எனினும், அவ்வுறுப்பினர் முன்கூட்டியே பெறப்பட்ட பாராளுமன்ற அனுமதியுடன் பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருக்கும் காலப்பகுதிக்குள் ஒரு தினத்தில் அத்தகைய குழுவின் ஏதாவது கூட்டம் நடைபெறுமிடத்து முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.]

### குழுக்களுக்கான பொது விதிகள்

***130. [(1) பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பாராளுமன்றத்தின் வேறோர் உத்தியோகத்தர் ஒவ்வொரு குழுவுக்கும் செயலாளராக இருப்பார்.

(2) குழுவொன்றின் அறிக்கை தவிசாளரினால் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பெற்ற குழு உறுப்பினர் எவராலும் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு குழு அல்லது அத்தகைய குழுவினால் நியமிக்கப்பட்ட உபகுழு எதுவும் பாராளுமன்றத்திற்கு வெளியே அமர்வதற்கு சபாநாயகரின் அனுமதியினைப் பெறுதல் வேண்டும்.

(4) உடனடியாகக் கிடைக்கத்தக்கதாக இல்லாத தகவல்களைத் தருவதற்கு அல்லது குழுவின் ஆய்வுத் தொடர்புக் கட்டளையின் வரையறைக்குட்பட்ட சிக்கலான விடயங்கள் பற்றி விளக்குவதற்கு சபாநாயகரின் அங்கீகாரத்திற்குட்பட்டு தொழில்நுட்ப அறிவுள்ள ஆட்களை நியமிக்கவும் அவர்களுக்கு ஊதியம் வழங்கவும் குழுவுக்குத் தத்துவமுண்டு. ]

****[“130 அ. (i) ஒவ்வொரு குழுவும், அத்தகைய குழுவினால் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உபகுழுவும், குழுவினால் அதிகாரமளிக்கப்படுமிடத்து, சபாநாயகரின் அங்கீகாரத்துடன் அவற்றின் கூட்டங்களுக்கு வெளியாரை அனுமதிப்பதற்குத் தத்துவமுடையதாயிருக்கும். அத்தகைய வெளியார் குழு அல்லது உபகுழு கலந்தாராய்கையில் கூட்டத்தில் இருத்தலாகாது.

(ii) கூட்டங்களுக்கு வெளியாரை அனுமதிப்பதற்கான நடைமுறையை அத்தகைய குழுவின் அல்லது உபகுழுவின் தவிசாளர் தீர்மானித்தல் வேண்டும்.

(iii) பாராளுமன்றத்தின் கலரிகளுக்கு வருகை தருவோர் தொடர்பாகப் பிரயோகிக்கப்படும் விதிகள், குழுக்களின் அல்லது உபகுழுக்களின் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படும் வெளியாருக்கும் பிரயோகிக்கத்தக்கனவாகும்.

(iv) குழு அல்லது உபகுழுக் கூட்டங்களில் ஒழுங்கைப் பேணுவதற்கு குழுத்தவிசாளர் அல்லது உபகுழுத் தவிசாளருக்குள்ள அதே அதிகாரமுண்டு.]

---

** 1985, சனவரி 8 ஆந் தேதிய இருபத்திரண்டாம் திருத்தத்தால் சேர்க்கப்பட்டது.

***1993, பெப்ரவரி 26 ஆந் தேதிய நாற்பத்திரண்டாவது திருத்தத்தால் மூலநிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டது.

****1993, பெப்ரவரி 26ஆந் தேதிய நாற்பத்திமூன்றாவது திருத்தத்தால் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலங்களின் அட்டவணைகள் மீது
முழுப் பாராளுமன்றக் குழுவின் நடைமுறை

131. (1) ஒவ்வொரு செலவீட்டுத் தலைப்பின் கீழுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத் தினதும் தலைப்பை தவிசாளர் குறிப்பிடுவார். அவ்வாறு குறிப்பிடுகையில் அந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் காணப்படும் ஏதாவதொரு கருத்திட்டத்திற்கு அல்லது செலவுவிடயத்திற்குரிய தொகையைக் குறைக்குமாறு அல்லது நீக்குமாறு ஒரு பிரேரணையை பிரேரிக்கலாம். அவ்வாறு பிரேரிக்கப்படும் பிரேரணை "............ என்னும் செலவுவிடயத்திற்கான (அல்லது......................... என்னும் கருத்திட்டத்திற்கான) ................ நிகழ்ச்சித்திட்டம் ............... ரூபாவால் குறைக்கப்படுமாக" என அமைதல் வேண்டும்.

(2) ஒரு கருத்திட்டத்திற்கான அல்லது செலவுவிடயத்திற்கான தொகை குறைக் கப்பட வேண்டுமென அல்லது நீக்கப்படவேண்டுமென ஒரு பிரேரணை பிரேரிக்கப்படுமி டத்து அது முடிவுறும்வரை உறுப்பினர்கள் அந்தப் பிரேரணைமீது மட்டுமே உரையாற்ற வேண்டும்.

(3) ஒரே நிகழ்ச்சித்திட்டதிற்குப் பல பிரேரணைகள் இருக்குமிடத்து அச்சிடப் பட்ட மதிப்பீடுகளில் அவை குறிப்பிடும் கருத்திட்டங்களோ செலவுவிடயங்களோ காணப்படும் ஒழுங்கின்படி மேற்கொள்ளப்படும்.

(4) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரே கருத்திட்டத்திற்கு அல்லது செலவுவிடயத்திற் குப் பல பிரேரணைகள் கொடுபடுமிடத்து குறைக்கப்படவேண்டுமென்ற மிகச்சிறிய தொகையிலான பிரேரணையே முதலில் பிரேரிக்கப்படும். தொகை குறைக்கப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட பிரேரணைகள் அனைத்தும் முடிவாக்கப்பட்ட பின்னரே ஒரு கருத்திட்டதிதை அல்லது செலவுவிடயத்தை நீக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணை பிரேரிக்கப்படல் வேண்டும்.

(5) எந்தவொரு கருத்திட்டத்திற்கான அல்லது செலவுவிடயத்திற்கான தொகை குறைக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்படவேண்டுமெனத் தவிசாளரால் பிரேரணை ஒன்று எடுத்தியம்பப்பட்ட பின்னர் அதற்கு முந்திய ஏதாவதொரு கருத்திட்டத்தின் அல்லது செலவு விடயத்தின்மீதான எந்தவொரு பிரேரணையும் பிரேரிக்கப்படவோ விவாதிக்கப்படவோ அனுமதிக்கப்படல் ஆகாது.

(6) எந்தவொரு கருத்திட்டத்திற்கான தொகை குறைக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்படவேண்டுமெனத் தவிசாளரால் பிரேரணை ஒன்று எடுத்தியம்பப்பட்ட பின்னர் அந்தக் கருத்திட்டத்தில் எந்தவொரு விடயத்திற்கான தொகையும் குறைக்கப்படவோ நீக்கப்படவோ வேண்டுமெனப் பிரேரணையெதுவும் பிரேரிக்கப்படலாகாது.

(7) ஒரு நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டம் அல்லது செலவுவிடயத்திற்கான செலவுத் தொகை அதிகரிக்கப்படவேண்டுமென முன்னறிவித்தலுடன் ஓர் அமைச்சராலன்றி வேறு எவராருலும் பிரேரணை எதுவும் பிரேரிக்கப்படலாகாது. அம்முன்னறிவித்தல் பிறவிடயங் களிலுனூடே அந்நிகழ்ச்சித்திட்டத்தின் செலவுத்தொகை எவ்வளவு தொகையால் அதிகரிக்க உத்தேசிக்கப்படுகின்றதென்பதையும் அவ்வதிகரிப்புக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்பதையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) நிகழ்ச்சித்திட்டத்தின் எந்தவொரு கருத்திட்டத்தின் அல்லது செலவுவிடயத் தின் தொகைக் குறைப்பிற்கான அல்லது நீக்கத்திற்கான பிரேரணை எதுவும் இல்லாதவி டத்து அல்லது அத்தகைய பிரேரணைகள் அனைத்தும் முடிவாக்கப்பட்டவிடத்து அக்கி ராசனத்திலிருந்து “................ நிகழ்ச்சித்திட்டத்திற்கான தொகையான ரூபா .................. (அல்லது ................ நிகழ்ச்சித்திட்டத்தில் குறைக்கப்பட்ட தொகையான ரூபா ................) அட்டவணையில் சேர்க்கப்படுமாக” எனும் பிரேரணை சபைக்கு விடப்படும். அப்பிரே ரணை அக்கிராசனத்திலிருந்து சபைக்குவிடப்பட்டபின் அந்நிகழ்ச்சித்திட்டதிலுள்ள தனிப்பட்ட கருத்திட்டங்கள் அல்லது செலவுவிடயங்கள் மீது மேலும் விவாதிக்க அனுமதிக்கப்படலாகாது.

(9) 24 ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவை எவ்வாறிருப் பினும் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டம் அல்லது செலவுவிடயத்திற்கான தொகைக் குறைப்பிற்கும் முன்னறிவித்தல் தேவைப்படும்.

**மிகைச் செலவுகள்**

132. (1) இக்கட்டளையின் (5) ஆம் பந்தியில் வகுத்துக்காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர்த்து ஏற்கனவே முடிவுற்ற நிதியாண்டின் சேவைக்குப் பணம் வழங்குவது பற்றிய (இதன்பின்னர் மிகைச் செலவு எனப்படும்) பிரேரணை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) ஒரு நிகழச்சித்திட்டத்தின் எந்தவொரு கருத்திட்டதின்மீதான மிகைச்செலவு எதையும் பரிசோதித்து அம்மிகைச்செலவு அந்நிகழ்ச்சித்திட்டதின்மீதா அல்லது அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு கருத்திட்டத்தின்மீது மாத்திரமா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்திட்டங்களின்மீதா எனத் தமது அறிக்கையில் தெரிவிக்க வேண்டுமென்பது அரசாங் கக் கணக்குக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலாகும்.

(3) ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட கருத்திட்டங்கள்மீது மட்டுமே மிகைச்செலவுகள் ஏற்பட்டிருப்பின் மிகைச்செலவுகள் முறையான அதிகாரத்துடன் செய்யப்பட்டனவா எனவும் சிக்கனம் சரியாகக் கையாளப்பட்டதா எனவும் குழு விசாரித்து அவைபற்றித் திருப்தியடைந்தால் அவ்வாறு அறிக்கையிடவேண்டும்; அத்தகைய மிகைச்செலவுக்கு மேற்கொண்டு அங்கீகாரம் பெறத்தேவையில்லை.

எனினும், ஆட்களுக்குரிய வேதனாதிகள் கருத்திட்டம் எதன்மீதிலும் மிகைச்செலவு எவையாயினும் செய்யப்பட்டிருப்பின் அவ்வாறு செய்யப்பட்ட செலவு அப்போது நடைமுறையிலுள்ள சம்பள அளவுத்திட்டங்களின்படி செய்யப்பட்டுள்ளனவென்றும் தனி ஒருவருக்கு நன்மைபயக்கக்கூடிய வகையில் செய்யப்படவில்லை என்றும் குழு திருப்தியடைதல் வேண்டும். அவ்வாறு திருப்தியடைந்தால் அப்படியே அறிக்கையிடல் வேண்டும்.

(4) அரசாங்கக் கணக்குக் குழு அவ்வாறு திருப்தியடையாவிடின் தான் சரியெனக் கருதும்வகையில் மிகைச்செலவு அல்லது மிகைச்செலவில் இவ்வளவுதொகை அனுமதிக்கப்படவில்லையென அறிக்கயிடலாம்.

(5) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் மிகைச்செலவு ஏற்பட்டிருப்பதாகவோ செலவுக்கான சில விடயங்களைத் தாம் அனுமதிக்கவில்லை என்பதாகவோ அரசாங்கக் கணக்குக் குழு அறிக்கையிடும்பட்சத்தில் அம்மிகைச்செலவை அல்லது அனுமதிக்கப்படாத சில விடயங்கள் மீதான செலவை ஈடுசெய்யும்பொருட்டு பரிசீலனை செய்யும் வகையில் பாராளுமன்றத்தை ஒரு குழுவாகக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கும் தீர்மானம் ஒன்று நிதியமைச்சரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தேதியில் பரிசீலிக்கப்படுவதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறல் வேண்டும்.

எனினும், அத்தகைய பிரேரணையில் குறிப்பிடப்படும் மிகைச்செலவு எதுவும் எவ்வாண்டிற்குரியதோ அதையடுத்துவரும் ஆண்டிற்கு அடுத்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(6) முறையான அதிகாரம் பெறப்படாத செலவு எதையும், அது ஒரு மிகைச் செலவாக இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, அனுமதியாது விடுவதற்கு அரசாங்கக் கணக்குக் குழுவிற்குள்ள அதிகாரத்தை இக்கட்டளையில் குறிப்பிடப்படும் எதுவும் குறைக்காது. அவ்வாறு அனுமதியாதுவிடும் எதற்கும் இக்கட்டளையின் (5) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள நடைமுறை பொருந்தும்.

*[132அ. (1) எந்த நிதியாண்டிலும் ஆகக்கூடிய எல்லைகள் விஞ்சப்பட்டுள்ள அல்லது சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருமுறையில் ஆகக்குறைந்த எல்லைகள் இணங்கியொழுகப்படாத (இதனகத்துப்பின்னர் முற்பணக் கணக்கு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமை எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முற்பணக் கணக்கு செயற்பாடு எதனதும் தொடர்பிலான பிரேரணையெதுவும் இக்கட்டளையின் (4) ஆம் பந்தியிற் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தவிர, ஏற்றுக் கவனிக்கப்படமாட்டாது.

(2) முற்பணக் கணக்குச் செயற்பாடு ஒன்றின் ஆகக்கூடிய எல்லைகள் விஞ்சப் படுகின்ற, அல்லது முற்பணக் கணக்குச் செயற்பாடு ஒன்றின் ஆகக்குறைந்த எல்லையொன்று இணங்கியொழுகப்படாதிருக்கின்ற, கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையிட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பகிரங்கக் கணக்குக் குழு பரிசோதனை செய்ய வேண்டுமென்று அக்குழுவுக்கு அறிவுறுத்தப்படுதல் வேண்டும். முற்பணக் கணக்குச் செயற்பாட்டு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமை சட்டத்திற்கு இணங்கவுள்ளதா என்பதைக் குழு தீர்மானித்தல் வேண்டும். அறிக்கை செய்யப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமை சட்டத்துக்கு இணங்கவிராதவிடத்து, அத்தகைய முற்பணக்

* 1984 ஏப்ரல் 4 ஆந் தேதிய பத்தாவது திருத்தத்தால் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

கணக்கு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமைக்கு அதிகாரமளிப்பதா அல்லவா என்பதைப் பகிரங்கக் கணக்குக் குழு தீர்மானித்தல் வேண்டும்.

132. கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்திற்குச் செய்யும் அறிக்கையில் அறிக்கையிடும் நட்டங்கள் எந்த நிதியாண்டுக்குரியனவோ அந்த நிதியாண்டு முடிவுறு முன்னர் அத்தகைய நட்டங்கள் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்படாதவிடத்து முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் மீதான எவையேனும் அதிகாரம் பெறாத தொழிற்பாட்டு நட்டங்களைப் பகிரங்கக் கணக்குக் குழு பரிசோதனை செய்யவேண்டுமென்று அக்குழுவுக்கு அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(4) முற்பகணக் கணக்குச் செயற்பாடு எதனதும் மீதான எல்லைகளுடன் இணங்கியொழுகாமை எதற்கும் அதிகாரமளிக்கப்பட வேண்டுமா அல்லவா என்று பகிரங்கக் கணக்குக் குழு விதந்துரைத்திருக்கும்போதெல்லாம், அல்லது முற்பணக் கணக்குச் செயற்பாடு எதனதும் மீதான அதிகாரம் பெறாத நட்டங்களுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டுமா அல்லவா என்று குழு விதந்துரைத்திருக்கும்போது, அத்தகையவிதப்புரைகளைப் பரிசீலிக்கும் பொருட்டுப் பாராளுமன்றம் குழுவொன்றாக அமைதல் வேண்டும் என்று தீர்மானிப்பதற்கான பிரேரணை ஒன்றை, நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சர் தாம் நிர்ணயிக்கும் ஒரு தேதியில், பரிசீலிப்பதற்கென, ஒழுங்குப் பத்திரத்தில் இடலாம்.]

**அரசாங்கப் பணம்**

133. குடியரசின் திரட்டு நிதியத்தை அல்லது குடியரசின் வேறு நிதியங்களைக் கையாளுவதற்கு அல்லது அவற்றின்மீது பொறுப்புகளைச் சுமத்துவதற்கு அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு, அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் வரியை நீக்குவதற்கு கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் பிரேரணை, சட்டமூலம் அல்லது அதற்கான திருத்தம் எதுவும் அமைச்சர் ஒருவரால் மாத்திரமே சமர்ப்பி க்கப்படலாம். அவர் அத்தகைய பிரேரணையை, சட்டமூலத்தை அல்லது திருத்தத்தினைக் கொண்டுவருவதன்முன்னர் அத்தகைய பிரேரணைக்கோ, சட்டமூலத்திற்கோ, திருத்தத்தி ற்கோ அமைச்சரவையின் அங்கீகாரமளிக்கப்பட்டதெனக் குறிப்பிட்டாலன்றி அவற்றைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்யாது.

**நிலையியற் கட்டளைகளில் திருத்தம்**

134. நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்காக எந்தவொரு உறுப்பினரும் ஒரு பிரேரணை முன்னறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய முன்னறிவித்தலுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களைக் கொண்ட ஒரு வரைவு நிலையியற் கட்டளை இணைக்கப்படல் வேண்டும். இப்பிரேரணை முன்மொழிந்து வழிமொழியப்பட்டதும் அது சபைக்கு விடப்படாமல் நிலையியற்கட்டளைகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்தகைய பிரேரணை எதைப்பற்றியும் நிலையியற் கட்டளைகள் குழு அறிக்கை சமர்ப்பிக்கும்வரை அதில் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுத்தலாகாது.

### நிலையியற் கட்டளைகள் இடைநிறுத்துதல்

135. ஒரு விசேட அலுவலைப் பரிசீலிக்க அல்லது முடிவாக்க இயலும்பொருட்டு முன்னறிவித்தல் வழங்கப்பட்ட ஒரு பிரேரணையை பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிப்பதன் மூலம் எந்தவொரு கூட்டத்திலும் ஒரு நிலையியற் கட்டளையை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்கலாம்.

எனினும், அமைச்சரவையின் ஓர் அமைச்சரால் பிரேரிக்கப்பட்டாலன்றி இந்நிலையியற் கட்டளையின் கீழ்வரும் ஒரு பிரேரணை வாக்கெடுப்பு வாயிலாகத் தீர்மானிக்கப்படும். வாக்கெடுப்பில் பிரேரணையை ஆதரித்து இருபதுக்குக் குறைவான உறுப்பினர்களே பெரும்பான்மையினராக வாக்களித்தார்களெனக் காணப்படின் பிரேரணை தோல்வியுற்றதாகப் பிரகடனமாகும்.

### சபாநாயகரின் பொது அதிகாரம்

136. நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடுசெய்யப்பெறாத விடயம் அனைத்திலும் பாராளுமன்ற அலுவலை நடாத்தும் முறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.

137. பாராளுமன்றக் கட்டட நிர்வகிப்பும் பாதுகாப்பு ஒழுங்குகளும் பாராளுமன்றச் சபையின் பொது நிர்வாகமும் சபாநாயகரின் பொறுப்பாகும்.

138. இந்நிலையியற் கட்டளைகள் மூலம் சபாநாயகர் ஆற்றக்கூடிய எதையும் சபாநாயகருக்குப் பதிலாகத் தலைமைவகிக்கும் பிரதிச் சபாநாயகரோ குழுக்களின் பிரதித் தவிசாளரோ அல்லது பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரோ ஆற்றலாம்.

### தவிசாளர் குழாம்

139. சபாநாயகர் ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் பிரதிச் சபாநாயகராலோ, பிரதிச் சபாநாயகர் சமுகமளிக்காதபோது குழுக்களின் பிரதித் தவிசாளராலோ கேட்டுக்கொள்ளப்படும்போது தற்காலிகமாகக் குழுக்களின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கு நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாத ஒரு தவிசாளர் குழாத்தை நியமித்தல் வேண்டும். காலத்திற்குக்காலம் தவிசாளர் குழாத்தின் அமைப்பை அவர் மாற்றலாம். பிரதிச் சபாநாயகருக்குப் பதிலாக ஒரு தற்காலிகத் தவிசாளர் தலைமைவகிக்கும்போது அவர் பிரதிச் சபாநாயகர் ஆற்றக்கூடிய எதையும் ஆற்றலாம். இக்குழாத்திலிருந்தே ஒவ்வொரு நிலையியற் குழுவிற்கான தவிசாளரைச் சபாநாயகர் நியமிப்பார். அவ்வாறு நியமிக்கப்படும் தவிசாளரை காலத்திற்குக்காலம் சபாநாயகர் மாற்றலாம்.

### உறுப்பினர்களைத் தொழில் முறையில் அமர்த்தல்

140. பாராளுமன்றத்தின் முன்னரோ அல்லது அதன் எந்தவொரு குழுவின் முன்னரோ எந்தவொரு கட்சிக்காரருக்காகவும் வேதனம் அல்லது வெகுமதி பெறவிருக்கும் சட்டத்தரணியாகவோ வேறெந்த முறையிலோ எந்தவொரு உறுப்பினரும் தோற்றலகாது.

### சாட்சிகளின் செலவு

141. அக்காலத்தில் வலுவிலிருக்கும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஒரு சாட்சியாக நீதிமன்றத்தில் சமுகமளிக்கும் ஒருவருக்கு வழங்கவேண்டிய தொகையே ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்படி அல்லது நேரில் சமுகமளிக்கும்படி அழைப்பாணை அனுப்பப்படும் ஒருவரின் செலவுகளுக்காக வழங்கப்படலாம்.

### எஞ்சிய அதிகாரங்கள்

142. இந்நிலையியற் கட்டளைகளில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாத எல்லா விடயங்களும் இந்நிலையியற் கட்டளைகளை விரிவாகச் செயற்படுத்தல் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளும் காலத்திற்குக்காலம் சபாநாயகர் பணிக்கின்ற முறைப்படி ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.